
Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்


மலர் – 23 இதழ் – 10 அக்டோபர் 2010


தனிப் பிரதி ரூ. 8/-





## கருத்தரங்கில் தேவசெய்தி அளித்த கருத்தாளர்கள் மற்றும் புதிய நூல்களை வெளியிட்டவர்கள் & பெற்றுக் கொண்டவர்கள்




























# மும்பையில்

# நற்செய்தி கூட்டம்

நாள் : 5.11.2010 – 7.11.2010 (வெள்ளி, சனி, ஞாயிறு)

நேரம் : மாலை 6.00 – 9.00 மணி வரை

செய்தியாளர்

## சகோ. S. ராஜநாயகம்

(தொலைக்காட்சி பேச்சாளர்)

காங்கேயம், தமிழ்நாடு.

இடம் : மனோகர் ஜோசி காலேஜ் மைதானம்,
சத்ரபதி சிவாஜி வித்யாலயா,
PMGP காலனி பஸ் டிப்போ பின்புறம்,
தாராவி, மும்பை – 400 017.

யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்.


## ஆசானின் அறிவுரையில்...


1. ஆசிரியர் உரை ........ 1
2. ஏன் நாங்கள் நியாயப்பிரமாணத்தின் கீழ் இல்லை? ........ 10
3. பெண்கள் பகுதி ........ 16
4. வாலிபர் பகுதி ........ 20
5. சிறுவர் பகுதி ........ 24
6. வாசன அடிப்படையிலான கொடுத்தலுக்கு பலன் ........ 26
7. இயேசு கிறிஸ்துவின் சிலுவை ........ 30
8. வேதாகமம் மட்டும் போதுமா? ........ 32

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 23 OCTOBER - 2010 Issue - 10**

# பதிமூன்றாம் வேதாகம கருத்தரங்கம் பற்றிய தகவல்கள்

## அக்டோபர் 1,2–2010 காங்கேயம்

**கருப்பொருள் : " கிறிஸ்துவின் நற்செய்தி "**

| | |
|---|---|
| கலந்து கொண்ட நாடுகள் | - 2 |
| கலந்து கொண்ட மாநிலங்கள் | - 3 |
| கலந்து கொண்ட ஊர்கள் | - 60 |
| கலந்து கொண்ட சபைகள் | - 70 |
| கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை | - 450 க்கு மேல் |
| கருத்தரங்கின் விளைவாக நற்செய்திக்குக் கீழ்ப்படிந்தவர்கள் | - 6 |

**வெளியிடப்பட்ட நூல்கள் -3**

| | |
|---|---|
| "ஏன் நாங்கள் நம்புகிறோம் எதை நாங்கள் நம்புகிறோம் " | - பாகம் I&II |
| ஆத்தும ஆதாயப் பிரசங்கங்கள் | - பாகம் I |

**தே**வ நாம மகிமைக்காய் நடந்த இக்கருத்தரங்கம், எல்லாவகையிலும் சிறப்படைய, ஊக்கமாய் ஜெபித்து, உற்சாகமாய்க் கொடுத்து உதவிய உங்கள் ஒவ்வொருவருக்கும், "கிறிஸ்துவின் நற்செய்தியை" பல கோணங்களில் தீர்க்கமாய் எடுத்துரைத்த கருத்தாளர்கள் எல்லோருக்கும், விசுவாசிகளை ஆர்வத்தோடு அழைத்து வந்த ஊழியப் பெருமக்கள் அனைவருக்கும், சத்தியத்தை நேசித்து குடும்பமாகவும், தனிப்பட்ட ரீதியிலும் கலந்து கொண்ட திருமறை ஆசான் வாசகர்கள் மற்றும் திருமறை தியானம் நேயர்கள் ஒவ்வொருவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

– ஆசிரியர்

ஆசிரியர் உரை

# ....நினைத்துக் கொள்ளுங்கள்

**எ**ப்பொழுதுமே, சொல்லுகிறவர் யார் என்பதைப் பொறுத்து, சொல்லப்படுகின்ற காரியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் அல்லது மரியாதை தரப்படும். சில நேரங்களில் சொல்லப்படும் சந்தர்ப்பமும் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படுவ துண்டு. இன்னும் சில சமயங்களில், யாருக்கு சொல்லப்படுகிற தென்பதும் கவனிக்க வேண்டிய ஒன்றாக இருக்கும். நான் சொல் லும் இக்கருத்தை எல்லோருமே ஓரளவு ஒத்துக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன். அப்படியானால், " நினைத்துக் கொள்ளுங்கள்" என்று யார் சொன்னது, எப்பொழுது சொல்லப்பட்டது, யாருக்குச் சொல்லப்பட்டதென்று அறிந்து கொள்ள ஆசைப்படுகிறீர்கள், அப்படித்தானே.

உலக மீட்பராகிய நம்முடைய இரட்சகர் இயேசு கிறிஸ்து, நன்மை செய்கிறவராய்ச் சுற்றித் திரிந்து இப்பூமியில் ஊழியம் செய்தார். அப்படி ஒரு சமயம் அவர், கலிலேயா, சமாரியாவின் ஓரங்களில் உபதேசித்த போது, நினைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லியிருக்கிறார். வெறுமனே நினைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லாமல், லோத்தின் மனைவியை நினைத்துக் கொள் ளுங்கள் என்று கூறியுள்ளார் (லூக்கா. 17:32). அவர், அவ்விடத் திலிருந்தபோது, தேவனுடைய ராஜ்யம் எப்பொழுது வருமென்ற ஒரு கேள்வியை பரிசேயர் அவரிடம் எழுப்பினார்கள் (லூக்கா 17:20). அதற்கு, *இதோ தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள்ளே இருக்கிறதே* என்று அவர்களுக்குப் பதிலளித்து விட்டு, அப்படி யே தன்னுடைய சீடர்களை நோக்கி, இரண்டாம் வருகை குறித்துப் பேசத் தொடங்கினார்.

அப்பொழுது, மனுஷகுமாரன் வெளிப்படும் நாளில் என்ன நடக்கும், எப்படி நடக்கும் என்பதை எடுத்துரைப்பதற்கு ஆதார மாக, பழைய ஏற்பாட்டில் இரண்டு சம்பவங்களை கோடிட்டுக் காட்டுகிறார். ஒன்று, "*நோவாவின் நாட்களில் நடந்தது போல மனுஷ குமாரனுடைய நாட்களிலும் நடக்கும் என்பது* " (17:26). இரண்டு, "*லோத்தினுடைய நாட்களில் நடந்தது போலவும் நடக்கும் என்பது* " (17:28). இந்த இரண்டு சம்பவங்கள் பற்றியும் குறிப்பிட்ட இயேசுவானவர், வேதாகம சரித்திரத்தில் பிரபலமா யுள்ள ஜலப்பிரளயத்தால் மாண்டுபோன நோவா காலத்து ஜனங் களை நினைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லாமல் அல்லது லோத்துவின் நாட்களில் அழிக்கப்பட்ட சோதோம், கொமோரா பட்டணத்து மனிதர்களை நினைத்துக் கொள்ளுங்கள் என்றும் சொல்லாமல், "*லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங் கள்*" என்றே சொல்லியுள்ளார்.

நினை, நினைவுகூருங்கள், நினைத்துக் கொள்ளுங்கள் என்று வேதாகமம் வேறு பல இடங்களிலும் கூறியுள்ளது. "வாலிபப் பிராயத்தில் உன் சிருஷ்டிகரை நினை" (பிர. 12:1) என்று பிரசங்கி கூறுகிறான். "*அவர் செய்த அதிசயங்களையும், அவருடைய அற்புதங்களையும், அவர் வாக்கின் நியாயத்தீர்ப்புகளையும் நினைவு கூருங்கள்* " என்று (I நாளா. 16:13) நாளாகமத்தில் காண்கிறோம். "*வேத வசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நினைத்துக் கொள்ளுங்கள்* " (எபி. 13:7) என்று எபிரெய ஆசிரியர் சொல்லியுள்ளார்.

ஆனால், மேற்சொல்லப்பட்ட வசனங்கள் சொல்லப்பட்ட அல்லது எழுதப்பட்ட சந்தர்ப்பத்திற்கும், இங்கே நமதாண்டவர், "*லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள்*" என்று சொன்ன சந்தர்ப்பத்திற்கும் பெருத்த வேறுபாடு உண்டு. அவர்கள் அந்த வசனங்கள் மூலமாகச் சொல்ல விரும்பிய கருத்திற்கும், நமதாண்டவர் இவ்வார்த்தைகள் மூலமாகப் பதிய வைக்க விரும்பிய பாடத்திற்கும் வித்தியாசம் உண்டு. ஆம், நமதாண்டவர் இவ்வார்த்தைகளை, கிறிஸ்தவ வாழ்க்கையின் முடிவான பலனைத் தரும். இரண்டாம் வருகையைக் குறித்துப் பேசும் போது, "*லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள்*" என்று சொல்லியுள்ளார். அதுவும் யாரிடம்? தன்னால் நேசிக்கப்பட்ட, தனக்கு அதிக நெருக்கமான சீடர்களிடம். இங்கே நாம் கவனித்தால், இவ்வார்த்தைகளைச் சொன்னவர், சொல்லப்பட்ட சந்தர்ப்பம், சொல்லப்பட்டவர்கள் என்று எல்லாமே முக்கியத்துவம் பெறுகிறதாகவே உள்ளது. ஆகவே, என்ன நோக்கத்தோடு, நமதாண்டவர் இவ்வார்த்தைகளைச் சொல்லியிருக்கலாம் என்பதை நாம் கவனிப்பது பிரயோஜனமாக இருக்கும்.

இரண்டாம் வருகைக்காகத் தன்னுடைய சீடர்களை ஆயத்தப்படும்படி எச்சரிப்பதற்குப் பழைய ஏற்பாட்டில் பல சம்பவங்களும், மிகப் பொருத்தமான நபர்களும் உண்டு. ஆயினும், அவர் "*லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள்*". என்று தமது சீடர்களுக்குச் சொல்லியுள்ளபடியால், அதற்கு ஒரு சிறப்பான காரணம் இருக்கவே வேண்டும். தன்னுடைய சீடர்களாக விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலிருப்பவர்களுக்கு மாத்திரமல்ல, பின்னாளில் தனது சீடர்களாக மாறும் எண்ணிலடங்காதவர்களுக்கும், லோத்தின் மனைவி சம்பவம் முன்னுதாரணமாக இருக்க வேண்டுமென அவர் விரும்பியிருக்க வேண்டும். இன்னும் சீடர்களின் ஆன்மீக வாழ்வுக்கும், லோத்துவுடைய மனைவியின் நிலைக்கும் ஒரு சம்பந்தம் உண்டென்பதை அவர் தனது ஞானத்தால் தெரிந்திருக்க வேண்டும். ஆகையால், "*லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்வது*" அன்று அவருடைய சீடர்களுக்கு நன்மை பயப்பதாக இருந்திருக்குமானால், அவருடைய சீடர்களாக இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் நமக்கும் அது நன்மை கொடுப்பதாகவே இருக்க வேண்டும்.

என்ன நன்மை என்று பார்ப்பதற்கு முன்பாக, லோத்தின் மனைவி பற்றிய பின்னணியைக் கொஞ்சம் தெரிந்து கொள் வோம்.

விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாம், தன் தேசத்தை யும், தன் ஜனத்தையும், தன் தகப்பன் வீட்டையும் விட்டு, தேவ அழைப்பிற்கிணங்க வந்தபோது, தன் சகோதரனுடைய குமாரனா கிய லோத்தையும் கூட அழைத்து வந்தார் (ஆதி. 12:15). ஒரு கட்டத்தில் இரண்டு பேருடைய வேலைக்காரருக்கும் வாக்கு வாதம் வந்தபோது (13:8), இருவரும் சகோதர அன்பு கெடாமல் பிரிந்து செல்ல முடிவெடுத்தனர் (13:9,10). அப்பொழுது, ஆபிர காமின் பெருந்தன்மையை தனக்கு சாதகமாக்கிக் கொண்டு, பசுமை நிறைந்த சோதோம், கொமோரா பட்டணங்களைத் தெரிந்து கொண்டு போனான் லோத். ஆனால், தான் விரும்பி எதிர்பார்த்த நன்மையான காரியங்களை லோத்து அங்கே காணா மல், மிஞ்சின தீமையைக் கண்டான். இந்தப் பட்டணங்களின் கூக்குரல் பெரிதாயிருந்தபடியாலும், அவைகளின் பாவம் கொடி யதாயிருந்தபடியாலும் (ஆதி. 18:20,21), தேவ கோபம் அவர் கள் பக்கமாகத் திரும்பியது.

ஆகவே, அப்பட்டணங்களை அழிக்க தேவன் முடிவு செய்தபோது, நீதிமானுக்குத் தயை செய்யும் தமது வழக்கத்தின் படியே, தன்னுடைய தூதர்களைக் கொண்டு, லோத்துவையும், அவன் குடும்பத்தையும் அழிவிலிருந்து காப்பாற்றும் முயற்சியில் இறங்கினார். இங்கே வசனம் சொல்லுவதைக் கவனியுங்கள். "*கிழக்கு வெளுக்கும்போது அந்தத் தூதர் லோத்தை நோக்கி; உன் மனைவியையும், இங்கே இருக்கிற உன் இரண்டு குமாரத்திகளை யும் அழைத்துக் கொண்டு போ என்று சொல்லி, அவனைத் துரிதப் படுத்தினார்கள் " (வ. 15). அவன் தாமதித்துக் கொண்டிருக்கும் போது, கர்த்தர் அவன்மேல் வைத்த இரக்கத்தினாலே, அந்தப் புருஷர் அவன் கையையும், அவன் மனைவியின் கையையும், அவன் இரண்டு குமாரத்திகளின் கையையும் பிடித்து, அவனைப் பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய் விட்டார்கள் (வ.16). அவர்களை வெளியே கொண்டு போய் விட்ட பின்பு, அவர், உன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப் பாராதே; இந்தச் சமபூமியிலே எங்கும் நில்லாதே; நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ என்றார்* " (ஆதி. 19:17). தொடர்ந்து வசனங்களைப் படிக்கும் போது, 26-வது வசனம் இப்படிச் சொல்லுகிறது. " லோத்தின் மனைவியோ பின்னிட்டுப் பார்த்து உப்புத்தூண் ஆனாள் " என்று.

லோத்தின் மனைவி அங்கே வீணாக அழிந்து போனாள். அழிந்து இன்றும் பேசப்படும் ஒரு நினைவுச் சின்னமாக உள்ளாள். அவளைப் போல, " *எனக்குப் பிரியமான சீடர்களே நீங்களும் அழிந்து போய்விட வேண்டாம். நித்திய ஜீவனுக்குப் பங்காளி களாக மாறுங்கள் என்பதே. லோத்துவின் மனைவியை நினைப் பூட்டியதற்கான காரணம்* ". அப்படித்தானே தெரிகிறது.

சரி, திருமதி லோத்துவின் அழிவிலிருந்து நமக்குக் கிடைக்கும் பாடங்கள் என்னவென்று இப்பொழுது பார்ப்போம்.

## I தப்பும் வழி கிடைத்தும் அழிந்து போனாள் (வ. 15,16)

திருமதி லோத்துவின் அழிவிலிருந்து நமக்குக் கிடைக்கின்ற முதல் பாடம், தப்பித்துக் கொள்ளும்படியான வாய்ப்பு அவளுக்குக் கொடுக்கப்பட்டிருந்தும் அவள் அழிந்து போனாள் என்பது.

ஆம், வசனங்கள் 15,16 ஆகியவைகளைக் கவனிக்கும் போது, தேவன் லோத்தின் குடும்பத்தின் மீது காட்டின பரிவு, கரிசனை நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. பட்டணத்துக்கு வரும் அழிவிலிருந்து காப்பாற்றப்படுவதற்கு தன்னுடைய தூதர்களைக் கொண்டு துரிதப்படுத்தினதோடல்லாமல், அவர்கள் இன்னும் தாமதித்துக் கொண்டிருந்தபோது, கையைப்பிடித்துக் கொண்டு போய் வெளியே விட்டார். தான் நேசிக்கிறவர்கள் காரியத்தில், தேவன் இதற்குமேல் என்னதான் செய்ய முடியும்? ஆனால், இவ்வளவுக்குப் பிறகும் லோத்தின் மனைவி திரும்பிப் பார்த்து, அழிந்து போனாள்.

அன்பானவர்களே, இந்த லோத்துவின் மனைவியுடைய நிலையோடு, இயேசுவின் சீடர்களாக அவரைப் பின்பற்ற விரும்புகிறவர்களின் நிலையை ஒப்பிட்டுப் பார்ப்போம். பாவத்தின் கோரப்பிடியில் சிக்கிச் சீரழிந்து கொண்டிருந்த சோதோம், கொமோராவின் அழிவிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும்படியான வாய்ப்பைத் தேவன் தமது மிகுந்த இரக்கத்தின்படியாகத் தந்தது போல, இந்தப் பாவ உலகத்திலிருந்தும், நரக ஆக்கினையிலிருந்தும் தப்பித்துக் கொள்ளும்படியான வாய்ப்பைத் தேவன் நம் ஒவ்வொருவருக்கும் தந்துள்ளார். *அவரைப் பின்பற்ற விரும்பும் ஒருவரும் கெட்டுப் போகக்கூடாதென்பதே தேவனின் விருப்பம்* (II பேதுரு. 3:9). மனிதர்களாகிய நம்மீது, பரலோகத்தின் தேவன் காட்டியுள்ள தயவை இங்கே பாருங்கள். முதலாவது, நம்முடைய பிறப்பே ஆச்சரியமான ஒன்று. தாவீது இது குறித்துச் சொல்லும் போது, *"நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால் உம்மைத் துதிப்பேன்..."* என்று கூறுகிறார் (சங். 139:14). *இப்படி பிரமிக்கத்தக்க அதிசயமாக நம்மைப் படைத்த தேவன், நம்மை அவரது சாயலாக, நித்தியத் தன்மையோடு படைத்துள்ளார்* (ஆதி. 1:26,27). மேலும், அவருடைய சாயலாக, நித்திய தன்மையோடு படைக்கப்பட்ட நாம், அவரோடு என்றென்றும் வாழும் பாக்கியத்தைப் பாவத்தினால் இழந்தபோது, நம்மைத் திரும்பவும் தம்மிடம் சேர்க்கும்படியாய், தன்னுடைய ஒரே பேறான குமாரனை இப்பாழும் உலகிற்கு அனுப்பிக் கொடுத்தார். *"தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்"* (யோவா 3:16).

*அந்தக் குமாரனும், தான் கோரச் சிலுவையில் கொல்லப்படுவதற்கு தன்னை அனுமதித்தார். அவருடைய இரத்தத்தினாலே நாம் கழுவப்பட்டு, ஆத்தும இரட்சிப்படைந்து, நாளும் அவருக்குள் வளர்ந்து, கனி தந்து, தெய்வீக சுபாவத்தில் பங்குள்ளவர்களா கும்படி பரிசுத்த ஆவியானவராலே வேத வசனத்தைக் கொடுத் தார்* (II தீமோ. 3:16,17; II பேது 1:4). *அந்த வசனங்கள், உலகெங்கும் பிரசங்கிக்கும்படியாய் அப்போஸ்தலருக்கும், சீடர்க ளுக்கும் கட்டளை கொடுத்தார்* (மத். 28:18-20). மனிதன் மீது தன்னுடைய அன்பைக் காட்டுவதற்கு, அவனுக்குள்ளாக தான் உண்டாக்கின ஆத்துமாவின் மீது தனக்குள்ள பாரத்தைக் காட்டு வதற்கு, தேவன், இதற்கு மேல் என்னதான் செய்ய முடியும்?.

" இதோ, வாசற்படியில் நின்று தட்டுகிறேன் " (வெளி. 3:20) என்ற வசனத்திற்கு ஒப்ப, உலகில் வாழும் ஒவ்வொருவரும் ஆத்தும இரட்சிப்படையும்படியான ஜீவனுள்ள வார்த்தைகள், விதவித மான வழிகளில் நம்முடைய வீடு தேடி வந்து கொண்டிருக்கிறது. இவ்வளவுக்குப் பிறகும், ஒருவன் தன் ஜீவனை இழந்து போகி றான் என்றால், அவனைக் குறித்து நாம் என்ன சொல்ல முடியும்? இன்னொரு லோத்தின் மனைவி என்று சொல்வதைத் தவிர!

நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து, "*லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள்* " என்று நமக்கு அறிவு றுத்தி, நம்மை எச்சரித்திருப்பதை நாம் அற்பமாக எண்ணி விட வேண்டாம். நாம் நித்திய அழிவுக்குத் தப்பிக் கொள்ளும்படி யாய் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வாய்ப்புகளை, வெகு நேர்த்தியாகப் பயன்படுத்தி, பாவங்கள் கழுவப்பட்டு, நம்மு டைய ஆத்தும இரட்சிப்பு நிறைவேற பயத்தோடும், பக்தியோடும் பிரயாசை எடுப்போம்.

## II எச்சரிக்கப்பட்டும் அழிந்து போனாள் (வ. 17)

திருமதி லோத்துவின் அழிவிலிருந்து நமக்குக் கிடைக்கின்ற இரண்டாம் பாடம், மிகச் சரியான முறையில் எச்சரிக்கப்பட்டி ருந்தும் அவள் அழிந்து போனாள் என்பது.

லோத்தின் மனைவி தப்பிக் கொள்ளும்படியான வாய்ப்பு களைக் கூட்டித் தந்த தேவன், ஒருவேளை அவள் அந்த வாய்ப் பை சரியாகப் பயன்படுத்தாமல் போகலாம் என்று எண்ணி, அவ ளைக் கடுமையாக எச்சரித்தார். இதோ வசனம், "... உன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப் பாராதே; இந்தச் சமபூமியிலே எங்கும் நில்லாதே; நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ" என்றார். இந்த எச்சரிப்பு தேவனுடைய தூதனாலே, இந்த மனுஷிக்கு நேரி டையாகக் கொடுக்கப்பட்டது. ஆனாலும், இந்த மனுஷி தேவ எச்சரிப்பை அலட்சியம் செய்தாள். விளைவு அழிவு.

அருமையானவர்களே, லோத்தின் மனைவி நிலையோடு நம்முடைய நிலையை ஒப்பிட்டுப் பார்ப்போம். சர்வ வல்லமையுள்ள நமது பரலோக தேவன், நம்மை எச்சரித்து, நமது ஆத்துமாவை,

நித்திய அழிவிலிருந்து காப்பாற்றும்படியாய், நம்மை மகா நாளின் நியாயத் தீர்ப்புக்கு ஆயத்தப்படுத்தும்படியாய் ஏராள மான வசனங்களை, நமது வேதாகமத்தில் வெளிப்படுத்திக் கொடுத்துள்ளார்.

இந்த வசனங்கள் என்ன சொல்கிறதென்று கவனியுங்கள். அப்போஸ்தலன் பவுல், தனது மார்ஸ் மேடைப் பிரசங்கத்தின் முடிவிலே நியாயத்தீர்ப்பு நிச்சயம் என்று சொல்லி எச்சரிக்கிறார். மேலும், "*ஒரு நாளைக் குறித்திருக்கிறார், அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந் தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார்* " (அப். 17:31). எபிரெயர் ஆசிரியர், இந்த பூமி யாருக்கும் சதம் அல்ல. எல்லோரும் மரித்தே ஆக வேண்டும் என்று கூறுகிறார். " அன்றி யும், ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும்...." (எபி. 9:27) என்று. சரீரத்தில் அவனவன் செய்த கிரியைகள் அவ னோடு கூட வரும் என்று பவுலடியார் கொரிந்தியருக்கு எழுதி எச்சரித்துள்ளார். ஏனென்றால், " *சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்கபலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்* " *என்று* (II கொரி. 5:10). பாவம் செய்த தூதர்களுக்கே தண்டனை கிடைத்திருக்கும் போது, மனிதர்களே, நீங்கள் தப்பிக்கொள்ளலாம் என நினைத்து விடாதீர்கள் என்று எவ்வளவு கறாராக அப்போஸ்தலன் யூதா பேசுகிறார் என்று யோசித்துப் பாருங்கள். " தங்களுடைய ஆதி மேன்மையைக் காத்துக் கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டு விட்ட தூதர்களையும், மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்த காரத்தில் அடைத்து வைத்திருக் கிறார் " (யூதா.6). " *அவபக்தியாய் நடப்பவர்களுக்கு நரகம் உறுதி என்று பேதுரு அப்போஸ்தலனும் தெளிவாகக் கூறியுள்ளார்* " (IIபேது. 2:4-6). இந்த நரகம் நித்தியமான தென்பதை நமது இரட்சகர் இயேசு கிறிஸ்து சந்கேத்திற்கிட மில்லாமல், இப்பூமியில் இருந்த போது சொல்லியுள்ளார். அப்பொழுது, இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்; " சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு, பிசாசுக்காகவும், அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்" (மத். 25:41) என்று.

இவ்வளவு எச்சரிப்பையும் மீறி ஒருவன் கவலையற்றிருந் தால் அவனை யாருக்கு ஒப்பிட முடியும்? கண்டிப்பாக, லோத்தின் மனைவிக்குத் தான். அவள் தேவ தூதனின் வார்த்தைகளாலே எச்சரிக் கப்பட்டிருந்தும் இழந்து போனாள். என்ன நடக்கும் என்று சொல்லப்பட்டிருந்தும் அலட்சியம் செய்தாள். தன்னைப் பின் பற்றுகிறவர்கள் இப்படி புத்தியீனமாக நடந்து, தனது நித்திய வாழ்வை இழந்து போகக்கூடாதென்று தான், நம தாண்டவர் "லோத்தின் மனைவியை நினைத்துக்கொள்ளுங்கள்" என்று சொன்னார்.

ஆகவே, வேத வசனங்களின் எச்சரிப்புகளை மதித்து, அதற்கு நம்மை ஒப்புக்கொடுத்து நாம் அழிவிலிருந்து காப்பாற்றப்படுவோமாக!

## III ஒரே ஒரு பாவத்தினால் அழிந்து போனாள் (வ. 26)

திருமதி லோத்துவின் அழிவிலிருந்து நம்மால் கற்றுக் கொள்ள முடிகின்ற மூன்றாவது பாடம், ஒரு பாவத்தினால், ஆம் ஒரே ஒரு பாவத்தினால் அவள் அழிந்து போனாள் என்பது.

ஆதியாகமம் 19:26-ம் வசனத்தைப் படிக்கும்போது, உணர்வுள்ளவர்களுக்குக் கண்டிப்பாகக் கண்ணீர் வரும். வசனம் இவ்விதம் சொல்லுகிறது, "*அவன் மனைவியோ பின்னிட்டுப் பார்த்து, உப்புத்தூண் ஆனாள்*" என்று. இங்கே, அவள் செய்த பாவம் என்ன? "பின்னிட்டுப் பார்த்தாள்" அவ்வளவுதான். அடடா, அய்யய்யோ, ச்சச்சே இதெல்லாம் பாவமா என்று நமக்கு எண்ணத் தோன்றுகிறது. நாம் எப்படி நினைத்தாலும், இது தேவனுடைய பார்வையில் பாவமாகவே கருதப்பட்டு, கடுமையான தண்டனையும் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கடுமையான தண்டனைக்கு அவள் செய்த பாவங்கள் எத்தனை? அய்யோ பாவம்! அவள் செய்தது ஒரே ஒரு பாவம் மட்டுமே. எவ்வளவு பரிதாபம் பாருங்கள்! இந்தப் பாவத்தின் கொடுமையை நினைத்தால் கோபம் தானாக வருகிறது. இந்த பாவம் எவ்வளவு பயங்கரமான ஒன்றாக இருக்கிறது என்று சிந்தித்துப் பாருங்கள்.

இங்கே, அவள் அழிந்து போகாமல், காப்பாற்றப்படுவதற்கு அவளுக்கிருந்த அனுகூலமான நிலையை கவனியுங்கள். ஒரு நீதிமானுக்கு மனைவியாயிருக்கும்படியான சிலாக்கியம் அவளுக்குக் கிடைத்தது (II பேது. 2:7,8). ஆயினும், இழந்து போனாள். தேவனுடைய விருப்பம் என்னவென்பது அவளுக்குச் சொல்லப்பட்டிருந்தது. அவைகளின்படி செய்ய ஒரு வகையாக முடிவெடுத்து சரியான திசையில் பிரயாணத்தை மேற்கொண்டும், ஒரு பாவத்தால், அழிந்து போனாள்.

ஒரே ஒரு பாவத்தினாலே, தேவனாலே, கடுமையாகத் தண்டிக்கப்பட்ட அநேக உதாரணங்கள் பரிசுத்த எழுத்துக்களில் உண்டு. அவைகளைப் படிக்கும்போது, ஒருவேளை, தேவன் தான் தவறு செய்து விட்டாரோ என்று கூட எண்ணத் தோன்றும். ஆனால், சர்வலோகத்தின் தேவன் நீதிபரர் (சங். 48:10) அவர் ஒருபோதும் தவறிழைத்ததில்லை.

தேவ எச்சரிப்பை அலட்சியம் செய்து இழந்து போன சிலரை இங்கே கவனியுங்கள். ஆதிப் பெற்றோராகிய ஆதாமும், ஏவாளும், ஏதேன் தோட்டத்தை விட்டும், கர்த்தருடைய சமூகத்தை விட்டும் துரத்தப்பட அவர்களுக்கு எத்தனை பாவம் தேவைப்பட்டது? ஒரே ஒரு பாவம் தான். காலமெல்லாம் தான் பாடுபட்ட

கானான் தேசத்துக்குள்ளாகக் காலடி வைக்க தனக்கு அருகதை இல்லாமல் போவதற்கு, மோசேக்கு எத்தனை பாவம் தேவைப் பட்டது? ஒரே ஒரு பாவம் தான். தேவ காரியங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்த, ஊசா அவராலேயே அடித்துக் கொல்லப் படுவதற்கு, அவனுக்கு எத்தனை பாவம் தேவைப்பட்டது? ஒரே ஒரு பாவம்தான். சுவிசேஷங்களின் வழியாய் இரட்சிப்படைந்தும், அந்த சுவிசேஷத்திற்குத் தங்களை ஒப்புக் கொடுத்து வாழும் அளவுக்கு மனமிருந்தும் அப்போஸ்தலருக்கு முன்பாக அடுத் தடுத்து விழுந்து சாவதற்கு, அனனியாவுக்கும், சப்பீராளுக்கும் எத்தனைப் பாவம் தேவைப்பட்டது? ஒரே ஒரு பாவம் தான்.

எனக்கன்பானவர்களே, இதைப் படிக்கும்போது பயமாக இல்லையா? தேவனிடத்தில் பட்சபாதம் இல்லையென்று வசனத் தில் காண்கிறோம் (அப். 10:34). அப்படியானால், பாவத்திற்கான தண்டனை கொடுக்கிற காரியத்திலும் பட்சபாதம் இருக்காது தானே. ஒரு பாவம் என்றாலும், தண்டிப்பார் தானே. மேலே சொல்லப்பட்டவர்களையெல்லாம் ஒரு பாவத்திற்காக தண்டித்த நமது நீதியுள்ள தேவன், நமது பாவத்தை மாத்திரம் தண்டிக்கா மல் விட்டுவிடுவாரா என்ன? நிச்சயமாகத் தண்டிப்பார். ஒரு பாவம் கூட இல்லாத பரிசுத்த வாழ்க்கை வாழ முடியுமா என்று எண்ணுகிறீர்களா? நிச்சயமாக முடியும். இதை நான் சொல்ல வில்லை. வேத வசனம் சொல்லுகிறது. *"உங்களை அழைத்த தேவன் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடக்கை களெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள் "* (1பேது. 1:15) என்று. அன்பும், இரக்கமும் உள்ள தேவன் முடியாத ஒன்றை நாம் செய்ய வேண்டுமென்று எதிர்பார்ப்பாரா? நிச்சயமாகமாட்டார்.

ஆகவே, நாம் ஒவ்வொருவரும், ஒரு பாவம் கூட இல்லாத பரிசுத்த வாழ்வு வாழ நம்மை ஒப்புக்கொடுப்போம். அப்படியே வாழ்வேன் என்று தீர்மானிப்போம். அதற்கான தீவிர முயற்சியில் வேத வசனங்களின் துணையோடு, கருத்தோடும், கண்ணீரோடும், ஜெபத்தோடும் இறங்குவோம். நம்முடைய ஒரே ஒரு பாவம் கூட நம்முடைய நித்தியத்தை விலைபேசக் கூடியதாக இருக்கிறதென் கின்ற உண்மையை முழுமையாகப் புரிந்து கொள்வோம். இதைப் புரிந்து கொண்டு, நம்முடைய இரட்சிப்பு நிறைவேற நாம் பிரயா சை எடுப்போமானால், அவருடைய வருகையில், கறையற்றவர் களும், பிழையில்லாதவர்களுமாய் அவர் சந்நிதியில் காணப்படு வோம் (II பேது. 3:14).

பரலோகத்தின் தேவன் உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர் வதிப்பாராக! ஆமென்!.

**E.Z.S. இராஜநாயகம்**

# ஏன் நாங்கள் நியாயப் பிரமாணத்தின் கீழ் இல்லை?

நாம் வேதாகமம் பற்றிப் படித்த போது வேதாகமம் எப்படி மூன்று பிரதான பிரமாணங்களைக் கொண்ட காலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதென்று காட்டினோம். முதலாவது, முற்பிதாக்களின் காலத்தில் இருந்த பிரமாணம், இரண்டாவது மோசேயின் காலத்தில் இருந்த பிரமாணம், மூன்றாவது நாம் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் கிறிஸ்துவின் பிரமாணம். வேதாகமம், பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இரு பிரிவுகளாகப் பிரிந்து இந்த பிரமாணங்கள் இடையே உள்ள வித்தியாசத்தை நாம் காண உதவி செய்கிறது. முற்பிதாக்கள் மற்றும் மோசேயின் பிரமாணங்கள் வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டிலும், கிறிஸ்துவின் பிரமாணம் புதிய ஏற்பாட்டிலும் காணப்படுகிறது. பழைய ஏற்பாடு இன்று நம்மைக் கட்டுப்படுத்துவதில்லை. ஆனால், புதிய ஏற்பாடு இன்றும் நம்மை தொடர்ந்து கட்டுப்படுத்துகிறது. காலம் உள்ள வரை அது நம்மை கட்டுப்படுத்தும். நாம் மேலும் படிக்கும் போது, இதை வசனத்திலிருந்து நாங்கள் உங்களுக்கு எடுத்துக் காட்டுவோம்.

நீங்கள் அறிந்திருக்கிறீர்களோ அல்லது அறியாமலிருக்கிறீர்களோ, இன்று உலகத்தில் இருக்கும் மூன்று முக்கியமான மதங்கள், தங்கள் விசுவாசத்திற்காக பழைய ஏற்பாட்டிற்குச் செல்கிறது. அம்மதங்களைச் சார்ந்தவர்கள் பழைய ஏற்பாடு தங்களை கட்டுப்படுத்துகிறதாக எண்ணி, அதை விசுவாசித்து, மற்றவர்களையும் அதற்குக் கட்டுப்படுத்தத் தேடுகிறார்கள். அவர்கள் காரியங்களைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை வேதாகமத்திலிருந்து நாங்கள் உங்களுக்குக் காட்டுவோம்.

ஓர் ஏற்பாடு என்பது உயிலைக் குறிக்கிறது என்று நான் உங்களுக்கு விளக்க விரும்புகிறேன். உதாரணமாக, ஒரு மனிதனுடைய உயில் அல்லது அவன் செய்து வைத்திருக்கும் ஏற்பாடு குறித்து நாம் பேசுகிறோம். இன்றைய நாட்களில் அநேகர் தங்கள் மரணத்திற்கு பிறகு தங்கள் சொத்து அல்லது பணம் என்ன செய்யப்பட வேண்டும் என்பது குறித்து உயில் எழுதி வைக்கிறார்கள். சிலர், தங்கள் மரணத்திற்கு முன்பு ஒன்றுக்கும் மேற்பட்ட உயிலைக் கூட எழுதி வைக்கிறார்கள். ஏனென்றால், வாழ்க்கையின் அந்திய காலத்தில் தங்களுக்கு முதல் உயில் பிடிக்கவில்லையென்றால், இரண்டாவது உயிலைப் பயன்படுத்த வேண்டும் என்பதற்காக அப்படிச் செய்கிறார்கள். அவர்கள் உயிரோடிக்கும்

வரை தாங்கள் தெரிந்து கொள்ளுகிறபடி எத்தனை உயில்களை வேண்டுமானாலும் உண்டாக்கலாம். அவர்கள் வைத்திருக்கும் செல்வத்தை அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால், அவர்கள் மரிக்கும் போது, அவர்களின் கடைசி உயில் தான் செல்லுபடியாகும், அது சட்டப்பூர்வமான உயிலாக இருந்தால். பணமும், சொத்தும் அந்த உயிலின் நிபந்தனைகளின் படி பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டும்.

அதுபோலவே, தேவன் தம்முடைய ஜனங்களுக்கு ஒரு ஏற்பாட்டை அல்லது உயிலை ஏற்படுத்திக் கொடுத்தார். அது நூற்றுக் கணக்கான வருடங்கள் தொடர்ந்தது. அந்த வருடங்களில் அது அவர் களைக் கட்டுப்படுத்தியது. ஆனால், தேவன் ஒரு புதிய ஏற்பாட்டை அல்லது உயிலை ஏற்படுத்தின நாள் ஒன்று வந்தது. தேவன் அந்த ஏற்பாட்டைக் கொடுத்த போது, கிறிஸ்து வின் மரணத்தினால் அது முத்திரைப்போடப்பட்டபோது, முதல் ஏற்பாடு பழைமையானது. அதனால் தான், நாங்கள் பழைய ஏற்பாடு என்றும், புதிய ஏற்பாடு என்றும் குறிப்பிடுகிறோம். எப்படி இந்த தேசத்தில் வாழும் ஒருவர், நூறு வருடங்களுக்கு முன்பு இந்த தேசத்தில் இருந்த சட்டத்தின்படி வாழமுடியாதோ, அது போலவே, நாமும் பக்தியின் பெயரால் செய்யும் காரியங் களுக்கு பழைய ஏற்பாட்டுக்குச் செல்ல முடியாது. மாறாக, இன்று வாழும் மக்கள் இன்று என்ன சட்டம் நடைமுறையில் இருக்கிற தோ அதன்படி தான் வாழவேண்டும். அதுபோலவே, இன்றைய நாட்களில் வாழும் நாம் புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டி ருக்கின்ற கிறிஸ்துவின் பிரமாணத்தின்படி ஆளப்படுவதில் திருப்திபட்டுக் கொள்ளவேண்டும். வேதவசனங்கள் அப்படித் தான் போதிக்கிறதா என்பதைக் காண நாம் இப்பொழுது வசனங் களிடத்தில் செல்வோம். புதிய ஏற்பாட்டின் எபிரெயர் புத்தகத்தை என்னோடு திருப்பிக் கொள்ளுங்கள். அங்கே கிறிஸ்துவைப் பற்றி சொல்லும் போது, இதன் ஆசிரியர் இப்படியாகச் சொல்கிறார். "*ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவர்த்திசெய்யும் பொருட்டு அவர் மரணம டைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்து கொள்வதற்காக, புது உடன்படிக் கையின் மத்தியஸ்தராயிருக்கிறார். ஏனென்றால், எங்கே மரண சாதனமுண்டோ, அங்கே அந்தச் சாதனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாக வேண்டும். எப்படியெனில், மரணமுண்டான பின்பே மரணசா சனம் உறுதிப்படும்; அதை எழுதினவன் உயிரோடிருக்கையில் அதற்குப் பெலனில்லையே* " (எபிரெயர் 9:15-17). கிறிஸ்து சிலுவையில் மரித்த போது, முதலாம் ஏற்பாட் டின் கீழ் வாழ்ந்த உண்மையுள்ளவர்களுக்கு அவர் இரட்சிப்பை சாத்தியமாக்கினார். ஆனால், அவர் மரித்த போது, பழைய

ஏற்பாட்டை எடுத்துப் போட்டு, அதற்குப் பதிலாக புதிய ஏற்பாட்டை வைத்தார் என்பதை தயவு செய்து கவனியுங்கள். மரணமுண்டான பின்பே மரணசாசனம் உறுதிப்படும் என்று அவர் சொன்னதை மறுபடியும் உற்று கவனியுங்கள்.

நாம் தொடர்ந்து படிக்கும் போது, எபிரெய ஆசிரியர் இப்படியாகச் சொல்லிக் கொண்டு போகிறார். "*இப்படியிருக்க, நியாயப் பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறபடியால், வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டு வருகிற ஒரே விதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது. பூரணப்படுத்துமானால், ஆராதனை செய்கிறவர்கள் ஒருதரம் சுத்தமாக்கப்பட்ட பின்பு, இன்னும் பாவங்களுண்டென்று உணர்த்தும் மனச்சாட்சி அவர்களுக்கு இல்லாதிருப்பதினால், அந்தப் பலிகளைச் செலுத்துகிறது நிறுத்தப்படுமல்லவா? அப்படி நிறுத்தப்படாதபடியால், பாவங்கள் உண்டென்று அவைகளினாலே வருஷந்தோறும் நினைவுகூருதல் உண்டாயிருக்கிறது. அல்லாமலும், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவர்த்தி செய்யமாட்டாதே. ஆகையால், அவர் உலகத்தில் பிரவேசிக்கும்போது; பலியையும், காணிக்கையையும் நீர் விரும்பவில்லை, ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணினீர்; சர்வாங்க தகனபலிகளும், பாவநிவாரணபலிகளும் உமக்குப் பிரியமானதல்ல என்றீர். அப்பொழுது நான்; தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார். நியாயப் பிரமாணத்தின்படி செலுத்தப்பட்டுவருகிற பலிகளைக் குறித்து மேற்சொல்லியபடி; பலியையும், காணிக்கையையும், சர்வாங்க தகன பலிகளையும், பாவநிவாரணபலிகளையும் நீர் விரும்பவில்லை, அவைகள் உமக்குப் பிரியமானதல்ல என்று சொன்ன பின்பு: தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன் என்று சொன்னார். இரண்டாவதை நிலை நிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப் போடுகிறார். இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்*" (எபிரெயர் 10:1-10). பழைய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்டிருக்கிற பிரமாணமானது வரப்போகிறவைகளுக்கு நிழலாய் மாத்திரம் இருக்கிறது என்று எபிரெய ஆசிரியர் எடுத்துக்காட்டுவதை கவனியுங்கள். செலுத்தப்பட்ட பலிகளினாலே அவர்களுடைய பாவங்களை முற்றிலுமாக, நிரந்தரமாக எடுத்துப்போட முடியவில்லை. ஏனென்றால், அவர்களுடைய பாவங்கள் வருடந்தோறும் நினைக்கப்படுகின்றன. அதன் பின்பு, கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரே

தரம் பலியிடப்பட்டதென்றும் அந்த பலியின் மூலமாக கிறிஸ்து முதலாவதை அதாவது, பழைய ஏற்பாட்டை எடுத்துப் போட்டு, இரண்டாவதை அதாவது, புதிய ஏற்பாட்டை நிலை நிறுத்தினார் என்றும் எபிரெய ஆசிரியர் சொல்லுவதைக் கவனியுங்கள். இப்பொழுதும் சாத்தியமானதாக இருந்தால் கூட பழைய ஏற்பாட்டுக்குத் திரும்பிச் செல்ல யார் விரும்புவர்? சிலுவையில் கிறிஸ்து அடைந்த தியாக மரணத்தின் முக்கியத்துவத்தையும், நாம் பழையதை விட ஒரு சிறந்த மேலான பிரமாணத்தின் கீழ் இருக்கிறோம் என்பதையும் சரியாகப் புரிந்து கொண்டவர்கள் யாரும் நிச்சயமாக பழைய பிரமாணத்துக்கு திரும்பிச் செல்ல மாட்டார்கள்.

பழைய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்டிருக்கிறபடி கிறிஸ்துவே மோசேயின் பிரமாணத்தின் கீழ் தான் வாழ்ந்தார். ஆனால், தன்னுடைய மரணத்துக்குப் பிறகு நடைமுறைக்கு வந்து, புதிய ஏற்பாடாக அதன் கீழ் இருந்து வாழ்பவர்களைக் கட்டுப்படுத்தும் சத்தியத்தையும், கொள்கைகளையும் உபதேசிப்பதில் தன்னுடைய நாட்களைச் செலவிட்டார். ஆகவே, கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்த போது, நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடித்து மற்றவர்களை அதன்படி செய்ய உற்சாகப்படுத்தினார். அவர் இப்படியாக விளக்கினார். *“நியாயப்பிரமாணத்தையானாலும், தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுவதற்கே வந்தேன். வானமும், பூமியும் ஒழிந்து போனாலும், நியாயப் பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஓர் எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்”* (மத்தேயு 5:17,18). இங்கே கிறிஸ்து, நியாயப்பிரமாணம் அழிக்கப்படமாட்டாது. ஆனால், அது நிறைவேற்றப்படும் என்று சொல்கிறார். அது நிறைவேறின பிறகு அதற்கு என்ன நடக்கும்? இயற்கையாகவே அது ஒழிந்து போகும் அல்லது யாரையும் தன்னுடைய பிரமாணங்களால் கட்டுப்படுத்தாது.

கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது தேவாலயத்தின் திரைச் சீலை மேல் தொடங்கி கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது (மத்தேயு 27:50). இது தேவாலயமும், பழைய பிரமாணத்தின் எல்லா காரியங்களும் முற்றிலுமாக நீக்கப்பட்டு அவைகள் ஒரு போதும் மனிதனைக் கட்டுப்படுத்தாது என்பதற்கான அடையாளமாக இருந்தது.

II கொரிந்தியர் 3:6 ம் வசனத்தில் பவுல் சொல்லும் போது, *“ புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி, அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார்; அந்த உடன்படிக்கை*

*எழுத்திற்குரியதாயிராமல், ஆவிக்குரியதாயிருக்கிறது; எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது".* இந்த வசனத்திலும் பின்வரும் வசனத்திலும் பவுல் கற்பலகைகளில் எழுதப்பட்டிருந்த மோசேயின் பிரமாணத்துக்கும், ஆவியின் பிரமாணமாகிய கிறிஸ்துவின் பிரமாணத்துக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைக் காட்டுகிறார். எழுத்து எப்படிக் கொல்லுகிறது என்றும், அதே நேரத்தில் கிறிஸ்துவின் பிரமாணம் எப்படி ஜீவனைக் கொண்டு வருகிறதென்றும் காட்டுகிறார்.

அப்போஸ்தலனாகிய பவுல், மோசேயின் பிரமாணத்துக்கும், கிறிஸ்துவின் பிரமாணத்துக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை கலாத்தியா கிறிஸ்தவர்களுக்கு இப்படியாக எழுதுகிறார். அப்படியானால், நியாயப் பிரமாணத்தின் நோக்க மென்ன? வாக்குத்தத்தத்தைப் பெற்ற சந்ததி வருமளவும் அது அக்கிரமங்களினிமித்தமாகக் கூட்டப்பட்டு, தேவதூதரைக் கொண்டு மத்தியஸ்தன் கையிலே கட்டளையிடப்பட்டது. மத்தியஸ்தன் ஒருவனுக்குரியவனல்ல. தேவனே ஒருவர். அப்படியானால், நியாயப் பிரமாணம் தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு விரோதமா? அல்லவே; உயிரைக் கொடுக்கத்தக்க நியாயப்பிரமாணம் அருளப்பட்டிருந்தானால், நீதியானது நியாயப்பிரமாணத்தினால் உண்டாயிருக்குமே. அப்படியிராதபடியால், இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கிற வாக்குதத்தம் விசுவாசமுள்ளவர்களுக்கு அளிக்கப்படும்படி வேதம் எல்லாரையும் ஏகமாய்ப் பாவத்தின் கீழ் அடைத்துப் போட்டது. ஆதலால், விசுவாசம் வருகிறதற்கு முன்னே, வெளிப்படப் போகிற விசுவாசத்திற்கு ஏதுவாக நாம் அடைக்கப்பட்டவர்களாய் நியாயப்பிரமாணத்தின் கீழ் காவல் பண்ணப்பட்டிருந்தோம். இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்துகிற உபாத்தியாய் இருந்தது. விசுவாசம் வந்த பின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே. நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே. யூதனென்றும், கிரெக்கனென்றுமில்லை, அடிமையென்றும், சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும், பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள். நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்திரராயும் இருக்கிறீர்கள். (கலா 3:19-29). கலாத்தியா கிறிஸ்தவர்களிடம் பவுல் நியாயப்பிரமாணம் அவர்களை கிறிஸ்துவினிடத்தில் கொண்டு வந்ததாகவும் அதற்கு பிறகு அவர்கள் ஒரு போதும்

நியாயப்பிரமாணத்தின் கீழ் இல்லை என்றும் கூறுகிறார். வேறு விதமாகச் சொன்னால், நியாயப்பிரமாணம் அதன் நோக்கம் முடிந்த பிறகு எடுத்துப் போடப்பட்டது. இப்போது நாம் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்தவர்களாயிருந்தால் நாமெல்லாரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருக்கிறோம்.

நாம் மோசேயின் பிரமாணத்தின் கீழ் இல்லை அல்லது பழைய ஏற்பாட்டின் கீழ் இல்லை என்பதை தெளிவாகக் காட்டுவதற்கு ஏராளமான வேதவசனங்கள் இருக்கின்றன. நாம் எல்லோரும் இப்போது கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழ் இருக்கிறோம். சிறந்ததும் மற்றும் பூரணமானதுமான பிரமாணத்தின் கீழ் இருப்பதற்கு நாம் எவ்வளவு பாக்கியவான்களாயிருக்க வேண்டும்!

என் நண்பர்களே, கிறிஸ்து நீங்கள் இரட்சிக்கப்படும்படி உங்களுக்காக மரித்தார். நீங்கள் அவரை விசுவாசித்து உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, அவரை தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்து, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றால் அவர் உங்களை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்வார்.

**J.C. சோட்**

## புதிய ஏற்பாட்டில் சபை என்பது கீழ்க்காணும் மறு பெயர்களையும் கொண்டது

| | |
|---|---|
| தேவனுடைய ஆலயம் | I கொரி. 3:16 |
| கிறிஸ்துவின் மணவாட்டி | எபே. 5:21-32 |
| கிறிஸ்துவின் சரீரம் | கொலோ 1:24; எபே. 1:22,23 |
| தேவனுடைய ராஜ்யம் | கொலோ. 1:13 |
| தேவனுடைய வீடு | I தீமோத். 3:15 |
| முதற்பேறானவர்களின் சங்கம் | எபி. 12:23 |
| கிறிஸ்துவின் சபை | ரோம. 16:16 |

## தேவனுடைய பார்வையில் மணவாட்டியாகிய சபை

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளே!

முதலாவதாக, தேவன் சபையை பார்க்கும்போது, அது தன் ஒரே பேறான குமாரனுடைய இரத்தத்தால் மூடப்பட்டுள்ளது என்பதைப் பார்க்கிறார்.

மனிதர்கள் தன்னை கவனிக்க வேண்டும் என்பதற்காக, ஒருவன் மற்றொருவனுடைய நலனுக்காக தன் வாழ்க்கையை தியாகம் செய்யும் போது, அவன் ஒரு விசேஷமானவனாக, தன்னால் நன்மை பெற்றவர்களிடம் ஒரு புனிதமானவானாகக் கருதப்படுகிறான் என்று நமக்குத் திட்டமாகத் தெரிகிறது. தேவன் கிறிஸ்துவினுடைய இரத்தத்தைப் பார்க்கும் போது, விலைமதிக்க முடியாத ஒரு ஈவாக அதை எண்ணுகிறார். அந்த இரத்தத்தால் மூடப்பட்டுள்ள ஒன்றாகிய சபை அந்த பரிசுத்த தன்மையைப் பெற்றிருக்கிறது என்றும் எண்ணுகிறார்.

இரண்டாவதாக, இரத்தத்தின் மூலமாக நம்மைப் பார்க்கும் போது, தேவன் நம்மை முழுமையானவர்களாக அல்ல, முழுமை யாக்கப்பட்டவர்களாகவே பார்க்கிறார்.

எந்த ஒரு மனிதனும், அவன் கிறிஸ்தவனாக இருந்தாலும் கூட பாவமில்லாமல் வாழமுடியாது. ஆனால் கிறிஸ்துவுக்குள், ஒவ்வொருநாளும் நடக்கும் போது அவரை பிரியப்படுத்தி அவருக்கு கீழ்ப்படிந்து வாழ விரும்பும்போது, அவன் தெரியாமல் செய்யும் பாவங்கள் அவன் கணக்கில் சேராது. (ரோமர். 4:8) அத்தோடு அவன் தொடர்ந்து இயேசு இரட்சகரின் இரத்தத்தில் சுத்தமாகவும் கழுவப்பட்டவனாகவும் காணப்படுகின்றான். (1யோ. 1:7).

நிறைய கிறிஸ்தவர்கள் இன்றைக்கு நினைத்துக் கொண்டிருக்கிறார்கள், நியாயத்தீர்ப்பு என்பது ஏதோ ஒரு நிகழ்ச்சி. அதில் தேவன் ஒரு மனிதனுடைய பாவங்களை எல்லாம் ஒரு பக்கமும், அவன் நல்ல செயல்களையெல்லாம் மற்றொரு பக்கமும் வைத்து, எது அதிகமான அளவு உள்ளதோ அதை வைத்து அவன் காப் பாற்றப்படுவான் அல்லது இழந்து போவான் என்று எண்ணு கிறார்கள். ஆனால், இந்த எண்ணமானது வேத வசனத்திற்கு விரோதமானது. அந்த நினைப்பு இயேசுவின் இரத்தமும், அதினால் உண்டாகும் இரட்சிப்பும் தேவையற்றது என்பது போல் உள்ளது. உண்மையென்னவெனில், ஒரு பாவிகூட பரலோகத்திற் குள் நுழைய முடியாது. ஒரு கிறிஸ்தவன் தன் பாவங்களுக்காக இரண்டு வகையான காரணங்களை சொல்லுவான்.

1. தெரியாமல் செய்கிற பாவங்கள் இயேசுவின் இரத்தத் தால் மூடப்பட்டு அது கணக்கிலே எடுத்துக் கொள்ளப்படமாட் டாது என்பது.

2. தெரிந்து, வேண்டுமென்றே துணிகரமாக செய்கிற பாவங்கள் கணக்கிலே எடுத்துக்கொள்ளப்பட்டு, அவன் மனந் திரும்பும் வரைக்கும், மன்னிப்பு கேட்கும் வரைக்கும் அது அங்கேயே இருக்கும் என்று. தேவனுக்கு விரோதமாக பாவம் செய்துவிட்டு ஒரு கிறிஸ்தவன் வாழவோ சாகவோ துணியக் கூடாது. ஏனென்றால், தேவனுடைய வார்த்தையானது, தெரிந்தே கீழ்ப்படியாமல் இருக்கிறவர்களை பரலோகத்திற்கு பங்குள்ளவர் களாக்காது.

எனவே சபை என்பது, முழுமையானவர்களினால் அல்ல, முழுமையாக்கப்பட்டவர்களால், பரிசுத்தமான மக்களால், குமார னுடைய இரத்தத்தால் தொடர்ந்து கழுவப்படுகிறவர்களால் கட்டப்பட வேண்டும். பாவத்தினால் சூழப்பட்ட எண்ணற்ற உலக மக்களைப் பார்க்கும் தேவன், கிறிஸ்து நீதியினால் பிரகா சிக்கப்பட்ட கிறிஸ்தவர்களை அவர் மகிழ்ச்சியோடு பார்க்கிறார். இருளில் பிரகாசிக்கிறவர்களாக அவர்களை பார்க்கிறார்.

மூன்றாவதாக, தேவன் தன்னை நேசிக்கிறவர்கள் யார் என்பதை பார்க்கிறார்;

சில சமயங்களில் கூட்டம் நிறைந்த பகுதிகளில் நாம் நடந்து செல்லும்போது, எதிர்பாராத விதமாக நமக்கு நெருக்க மானவர்களை சந்திக்க நேரிடும். ஒரு சகோதரனையோ, ஒரு மகளையோ, தகப்பன், கணவன் இப்படி கடல் போல் திரண்டிருக் கும் மக்கள் வெள்ளத்தில் அந்த முகங்களைக் காணும் போது எவ்வளவு மகிழ்ச்சி கதிர்கள் நமக்குள்ளாக பாய்ந்து செல்லும். தேவன் மக்கள் கூட்டத்தின் மத்தியில், தன்னை உண்மையாலுமே தமக்காக அர்ப்பணித்த விலைமதிக்க முடியாத மக்களை பார்க் கிறார். அது அவர் இருதயத்திற்கு எவ்வளவு மகிழ்ச்சியை தரும்!

நான்காவதாக, ஏகோபித்த மனதை உடைய மக்களை தேவன் சபையில் பார்க்கிறார்:

ஏகோபித்த மனது என்பது இருவருக்குள்ளே பரிமாறிக் கொள்ளப்படும் ஒரு சொத்து. இந்த மாதிரி மனதை உடைய நண்பர்கள் எங்களை சந்திக்க வரும்போது அவர்களின் நீண்ட நேர பேச்சை ஆச்சரியத்துடன் பார்ப்பதுடன் பொதுவாக முன்னி ரவு வேலைகளில், குடும்பத்தில் உள்ள மற்ற அங்கத்தினர்கள் படுக்கைக்குச் சென்ற பின்பு அவர்களோடு உட்கார்ந்து பேசு வோம். சமையல் அறையில் உள்ள மேசை மீது அமர்ந்து விடிவ தற்கு சற்று முன்வரை எங்களுடைய எண்ணங்களை பரிமாறிக் கொள்வோம். நாம் பழகுகிற அனைவரிடம் இந்த மாதிரி எண்ணங்களை பகிர்ந்து கொள்ள முடியாது. விசேஷித்த சிலர், அதிலும் ஒரே மாதிரி மதிப்பறிந்து எண்ணங்களும், நோக்கங் களும் உடையவர்களிடையே மட்டும் தான் இவ்வாறு சம்பா ஷிக்க முடியும். இதே உண்மை தான் தேவனுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவில் கூட இருக்கிறது. கிறிஸ்தவர்களால், ஒரே மாதிரி மனதை உடையவர்களால் மட்டும் தான் இதைச் செய்ய முடியும். தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே நீண்ட மாலை நேர

ஐக்கியம், திருப்தியையும், மகிழ்ச்சியையும் இருவருக்குமிடையே கொண்டு வருகிறது. ஏகோபித்த மனதை உடையவர்களுக்கு, தேவனுடைய வார்த்தையின் மூலம் அவர் யார் என்பதையும் மனதை திறந்து ஜெபிப்பதன் மூலம் ஒரு விலையுயர்ந்த உறவை நிலைநாட்ட முடியும்.

ஐந்தாவதாக, சபையானது தேவனுடைய பார்வையில் முழுமையானதாகவும், விசேஷமானதாகவும் உள்ளது. ஏனென்றால் அங்கு அவர் தன்னைப் பிரதிபலிக்கின்ற மக்களை பார்க்கிறார்.

எந்த ஒரு வாழ்க்கையும் மிகவும் சுத்தமானதாகவும், கறையற்றதாகவும், மனிதனின் தேவைகளை சந்திக்கத்தக்கதான முழுமையுள்ளவைகளாகவும் இல்லை. தன் சாயலாக படைக்கப்பட்ட மக்களிடம் பரிசுத்தத்தை புதுப்பித்துக் கொள்ள அவர் அவர்களை தன் சொந்த ஜனங்களாக மாற்றியது மிகப்பெரிய மகிழ்ச்சியான காரியம்.

ஆறாவதாக, பூமியில் வாழும் அனைத்து மக்களுக்குள்ளும், சபையானது தேவனுடைய பார்வையில் விசேஷமானது ஏனென்றால், அது தன் சொந்த பிள்ளைகளால் கட்டப்பட்டுள்ளது.

எப்பொழுதுமே பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைக் குறித்து பெருமைப்படுவார்கள். இதிலும் ஏதாவது ஒரு நல்ல காரியத்தை அவர்கள் செய்யும்போது கூடுதலாக பெருமைப் பட்டுக் கொள்வார்கள். அவர்கள் வளர்ந்து பக்குவப்படும் பொழுது மற்றவர்கள் விருப்பப்படியல்ல, பெற்றோர்கள் விருப்பப்படியுமல்ல தாங்கள் விரும்பியபடி செயல்படுகிறார்கள். தேவன் தங்கள் பிள்ளைகளைப் பற்றி பெருமைப்படுவதை நினைத்துப்பாருங்கள். சபை அவர்கள் சோதனைகளையும், சவால்களையும் எதிர்த்து தைரியமாக நிமிர்ந்து தங்களுக்குரிய ஆவிக்குரிய பலத்தோடு நிற்கும் போது அவர் எவ்வளவு மகிழ்ந்து போவார்! அவர் யோபைப் பற்றி சாத்தானிடம் கேட்ட கேள்வியை நினைத்துப் பாருங்கள்? நீ என் தாசனாகிய யோபின் மேல் கவனம் வைத்தாயோ? உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமான மனுஷனாகிய அவனைப் போல் பூமியில் ஒருவனுமில்லை. தேவன் தன் பிள்ளைகளைப் பற்றி எவ்வளவு பெருமைப்படுகிறார்!.

ஏழாவதாக, இயேசு கிறிஸ்து சபையை தன் மணவாட்டியாகப் பார்க்கிறார். மணவாட்டி என்றால் என்ன? அவள் தெரிந்தெடுக்கப்பட்டவள், ஒரு வாலிபன் தனக்கே சொந்தமாக தெரிந்து கொள்ளும் ஒரு முழுமையானவள், எல்லாரையும் விட விசேஷமானவள். அவனுடைய கண்கள் அவளைப் பார்க்கும் போது, அவைகள் பிரகாசிக்கின்றன, இதமான அன்பால் மட்டுமல்ல, சொந்தமான அன்பினால்; அவள் என்னுடையவள்! அவளுக்காக அவன் வாழ்கிறான். ஒருவேளை அவளை ஆபத்திலிருந்து காப்பாற்ற தன் உயிரையும் கொடுக்க தயராகிறான். இதே கருத்தை சபையோடும் கிறிஸ்துவோடும் பொருத்திப்பார்ப்போம்.

அவர் தேவனுடைய ஒரே குமாரன், மணவாளன் தன் மணவாட்டிக்காக தெரிந்து கொள்ளப்பட்டவர். ஆனால் இந்த சபையானது உலக மக்களால் அவதூறாகவும், பழியாகவும், ஏளனமாகவும், வெறுப்பாகவும் பேசப்படுகிறது. சபையானது அவருடைய பெயரை தரித்திருக்கிறது. சபையானது அவரை ஆண்டவரே என்று சொல்லி அவரில் அன்பு கூறுகிறது. அவர் சபையில் வெற்றி சிறந்தார். நாம் கற்பனைக் கதைகளில் படித் திருக்கிறோம். ராஜாவும், ராணியும் மகிழ்ச்சியாக வாழ்ந்தார்கள் என்று. அது நிஜ வாழ்க்கைக்கு ஒத்து வராது. ஆனால் தேவன் வாக்கு கொடுத்திருக்கிறார். சபையானது கிறிஸ்துவுக்குள் தேவ னோடு இணைந்திருக்குமானால் இது சாத்தியமானதாகும்.

இந்த உலகமும், சரித்திரங்களும் சபையை மற்றவர்க ளுக்கு காட்டாது, அந்த தூய சரீரத்தில் அங்கமாயிருக்கிற நாம் தான் மற்றவர்களுக்கு இதை அறிமுகப்படுத்த முடியும். சத்தியத் தோடு சமரசம் செய்து தேவனின் பெயருக்கு களங்கம் கொண்டு வரக்கூடாது. மாறாக, சபையின் அழகும், முழுமையையும் உணர்ந்து சபையால் வரும் உன்னத ஆசீர்வாதங்களை மற்றவர் பகிர்ந்து கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபைதான் இந்த வேலையைச் செய்ய வேண்டும்.

மணவாட்டியாகிய கிறிஸ்துவின் சபையில் அங்கமாக இருக் கும் நாம் மணவாளனாகிய கிறிஸ்துவை சந்திக்க ஆயத்தமாயி ருப்போம்.

**ரேச்சல் இராஜநாயகம்** **MARY DI PALMA**

## நாளும், நடப்பும்

1. கர்நாடகாவில் குடியரசுத் தலைவர் ஆட்சிக்கு ஆளுநர் பரிந்துரை.
2. சோனியாகாந்தியின் திருச்சி வருகை தமிழக காங்கிரஸ் கட்சி யினருக்கு புதிய நம்பிக்கையைக் கொடுத்துள்ளது.
3. மருத்துவத்தில் பிரிட்டிஷ் விஞ்ஞானிக்கு நோபல் பரிசு.
4. அயோத்தி சம்பந்தமான அலகாபாத் தீர்ப்பு சமரசத்துக்கான கதவைத் திறந்துள்ளது.
5. காஷ்மீர் பிரச்சினை மத்திய அரசுக்கு சிம்ம சொப்பனமாக மாறி வருகிறது.
6. ஊழலை ஏன் சட்டப்பூர்வமாக்கக் கூடாது என்ற கேள்வியை உச்ச நீதிமன்றம் எழுப்பி வியப்பை ஏற்படுத்தி உள்ளது.
7. பல சவால்களோடு துவங்கிய காமன்வெல்த் போட்டியில் இந்தியா தனது முத்திரையை சிறப்பாகப் பதித்துள்ளது.

வாலிபர் பகுதி

# ....நீ யார்?

தேவனுடைய நாமத்திற்கு மகிமை உண்டாவதாக. உங்கள் அனைவருக்கும் நாம் எல்லோரும் நீதிமான்களாக்கும்படி உயிர்த்தெழுந்து நமக்காக பிதாவிடம் பரிந்துப் பேசுகிறவரும், ஆண்டவரும் இரட்சகருமாயிருக்கின்ற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த உன்னதமான பத்திரிக்கையின் வாயிலாக உங்களை சந்திப்பதில் மிகவும் சந்தோஷமடைகிறேன். நான் கொடுத்து இருக்கும்.. நீ யார்? என்கிற தலைப்பைப் பார்த்தவுடன் உங்கள் முகங்கள் வேறுபடும் என்று நினைக்கிறேன்! ...நீர் யார்? என்று நான் உங்களை பார்த்து கேட்பதற்கு முன், யார் இந்த வார்த்தையை வேதாகமத்தில் பயன்படுத்தி இருக்கிறார் என்ற வேத வசனத்துடன் சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

பிரியமானவர்களே! இந்த வார்த்தையை வேதத்தில் பிதாவாகிய தேவன் இஸ்ரவேல் மக்களைப் பார்த்துக் கேட்கிறார். **உன்னை உண்டாக்கின கர்த்தரை மறக்கிறதற்கு நீ யார்? ஏசா. 51:12.** நாம் இந்த வசனத்தை கூர்ந்து கவனிக்க வேண்டும். அன்பானவர்களே நீ என்பதற்கும் நீங்கள் என்பதற்கும் வித்தியாசம் உண்டு, நீ என்ற வார்த்தை ஒருவருக்கு மரியாதை கொடுக்காமல் பேசகூடிய ஒன்று, நீங்கள் என்ற வார்த்தை ஒருவருக்கு மரியாதை கொடுத்து பேசக்கூடிய ஒன்று. தேவன் இஸ்ரவேல் மக்களை பார்த்து உன்னை உண்டாக்கின கர்த்தரை மறக்கிறதற்கும் நீ யார் என்கின்ற வார்த்தையை ஏன் பயன்படுத்துகிறார்? இஸ்ரவேல் மக்களைப் பற்றி நமக்கு சொல்லவே தேவையில்லை அவர்கள் வாழ்ந்த காலத்தில் தேவனுக்கு முன்பாக நன்மை செய்ததை காட்டிலும், தீமை (பாவம்) செய்ததே அதிகம் உபா 7:7-10 இஸ்ரவேல் மக்களை தமக்கு சொந்த ஜனமாகவும் முற்பிதாக்களுக்கு இட்ட ஆணையை காக்க வேண்டும் என்பதினால் எகிப்தின் ராஜாவாகிய பார்வோனின் கையிலிருந்து மீட்டு வந்தார். இவர்கள் (1) மாம்ச (சரீர) பிரகாரமான காரியத்திலும் (2) ஆவிக்குரிய ரீதியிலும் பாவம் செய்து தேவனை மறந்தார்கள். எப்படி என்று வேத வசன ஆதாரத்துடன் பார்ப்போம் என்னோடு சேர்ந்து வாருங்கள்.

## I. மாம்சிக (சரீர) காரியத்தில் தேவனை மறந்தார்கள்

இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதும் இல்லை, தூங்குவதும் இல்லை என்று சங் 121:4-ல் கூறுகிறது. தேவன் இஸ்ரவேல்

மக்களை எகிப்தின் அழிவின் பாதையில் இருந்து நித்திய பாதைக்கு அவர்களை கொண்டு வர சகல அற்புதத்தினாலும் வழி நடத்தி வந்தார். ஆனால் அவர்கள் அற்ப சரீர காரியத்திற்கு தன்னை உண்டாக்கின கர்த்தரை மறந்தார்கள், எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து இஸ்ரவேல் மக்களை மோசேயின் மூலம் வழி நடத்திக் கொண்டு வந்தார். உணவுக்காக (ஆகாரம்) நன்றி இல்லாத ஜனங்களாக மாறினார்கள். யாத் 15:24, 16:3, 17:3, எண் 11:5, இந்த வசனப் பகுதியை சற்று தயவுக் கூர்ந்து வாசித்துப் பாருங்கள். இவர்களின் முறுமுறுப்பு என்ன என்று தெரியும். செங்கடலை பிளந்து வெட்டாந்தரையிலே அதாவது "பைபாஸ் ரோட்டில் போவது போல" இவர்கள் வெட்டாந்தரையிலே நடந்து போனார்கள். தண்ணீர் இடது வலது புறமாக அவர் களுக்கு மதிலாக (பாதுகாப்பாக) நிற்கும்படி தேவன் செய்தார் இரவில் அக்கினி ஸ்தம்பத்திலும் பகலில் மேகஸ் தம்பத்திலும் தேவன் அவர்களை கண்மணியை போல வழி நடத்தினார், இப்படிப் பட்ட அதிசயத்துடன் வழி நடத்தின தேவன் நமக்கு ஆகாரம் கொடுப்பார் என்று இஸ்ரவேல் மக்கள் நினைக்காமல், ஆகாரத் திற்காக முறுமுறுத்து தேவனை மறந்தார்கள். ஆனாலும் தேவன் இஸ்ரவேல் மக்களை கைவிட்டு விட்டாரா? இல்லை. தேவன் இரக்கமும் மன உருக்கமானவர் அதே சமயம் எரிச்சல் உள்ள தேவன் என்றும் வேதம் கூறுகிறது. நம்முடைய நினைவில் இருக்க வேண்டியது இஸ்ரவேல் மக்கள் பாவம் செய்யும் போது அதற்குரிய தண்டனையும் அவர்கள் பெற்று இருக்கிறார்கள்.

பிரியமானவர்களே, நாம் எப்படி இருக்கிறோம்? இஸ்ர வேல் மக்களை போல நாமும் மாம்ச (சரீர) காரியத்திற்காக நம்மை உண்டாக்கின தேவனை மறக்கிறவர்களாக இருக்கிறோ மா? கலா. 5:24 கிறிஸ்துவினுடையவர்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளை சிலுவையில் அறைந்திருக்கிறார்கள் என்று கூறுகிறது.

1 தீமோ 4:8 சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது அற்பமான இந்த சரீர முயற்சிக்காக நம்மை உண்டாக்கின தேவனை நாம் மறக்கலாமா? அப்படி மறக்கிறவர்களாக நாம் இருந்தால் நாமும் இஸ்ரவேல் மக்களை போல தான் இன்றும் இருந்து கொண்டு இருக்கிறோம். நாம் சரீரப்பிரகாரமான காரியங்களுக்காக அவர்களை போல தேவனுக்கு முன்பாக முறுமுறுத்துக் கொண்டு இருப்பதை விட்டு விட வேண்டும். ஏனென்றால் ரோமர் 8:6-ல் மாம்ச சிந்தை மரணம் என்று கூறுகிறது. பிரியமானவர்களே, உலக ஆசைக்காக நம்மை உருவாக்கிய தேவனை மறக்கலாமா? கூடாது அப்படி மறந்தால் நீ யார் என்ற தேவனுடைய வார்த்தைக்கு நாம் ஆளாகிவிடுவோம்.

## II. ஆவிக்குரிய ரீதியிலும் தேவனை மறந்தார்கள்

எரேமியா தீர்க்கன் கூறுகையில் ஒரு பெண் ஆபரணத்தையும் (நகை) ஒரு மணவாட்டி (மணப்பெண்) தன் ஆடைகளை மறப்பாளோ? எரே 2:32, பெண்கள் இவ்விரண்டு காரியத்தை எந்த சமயத்திலும் மறக்கவே மாட்டார்கள் உண்மைதானே! என் ஜனங்களோ எண்ணி முடியாத நாட்களாய் என்னை மறந்துவிட்டார்கள் என்று கூறுகிறார். கொஞ்ச நாட்களிலே தேவனை மறக்கும்படியான சிந்தனையை கொண்டு வரும் அளவிற்கு அவர்கள் பாவம் இருந்து இருக்கிறது. ஆனாலும் தேவன் இஸ்ரவேல் மக்களை எவ்வளவு நேசித்து இருந்தால் "என் ஜனங்களோ" என்று கூறுகிறார். நித்தியமுள்ளவரை தேவனாக பெற்று இருந்தும் அவரை மறந்து நித்தியத்தை இழந்து போனார்கள். எரே 3:21 தங்கள் வழியை மாறுபாடாக்கி ஒன்றான மெய் தேவனை மறந்து பொய்யான விக்கிரகங்களை வணங்கும்படி தங்களை அழிவுக்கு ஒப்புக்கொடுத்து ஆவிக்குரிய ரீதியில் தேவனை மறந்துப் போனார்கள். எரே. 5:7 இந்த வசனத்தில் உள்ள பாவங்களை படித்து பாருங்கள். இப்படிப்பட்ட பாவம் செய்து தேவனை மறந்துப் போனார்கள். எரே. 13:25 அவர்கள் தேவனை மறப்பதற்கு ஒரு முக்கியமான சான்றும் கொடுக்கப்படுகிறது. அவர்கள் நம்பிக்கையான தேவனை மறந்து பொய்யான (சாத்தானை) நம்பினார்கள். யோவான் 8:44 பொய்க்கு பிதா சாத்தான் என்று இயேசு கிறிஸ்துவே கூறுகிறார். இஸ்ரவேல் மக்கள் மாய்மாலத்தை நம்புகிறவர்களாக இருந்து இருக்கிறார்கள். இந்த இஸ்ரவேல் மக்களை நாம் புத்தியில்லாத இஸ்ரவேலரே என்று கூட கூறலாம், ஏன் என்றால் எரே. 18:5, என் ஜனங்களோ என்னை மறந்து மாயையான விக்கிரகங்களுக்குத் தூபங்காட்டுகிறார்கள் ஒன்றுமே இல்லாத கல், மரம் இவைகளால் ஆன சிலைகளுக்கு முன்பாக இவர்கள் வணங்குவதும், தூபங்காட்டுவதுமாக இருந்து இருக்கிறார்கள் ஏசா 44:13-20 இந்த வசனப் பகுதியைத் தியானித்து பார்க்கவும், இப்படி ஆவிக்குரிய ரீதியில் பாவம் செய்து இருக்கிறார்கள். நாம் ஆவிக்குரிய ரீதியில் எப்படி இருக்கிறோம்?

பிரியமானவர்களே! இந்த இஸ்ரவேல் மக்களை போல நாம் இருக்கக்கூடாது. ஏசா. 65:11,12 கர்த்தரின் பர்வதத்தை (ஆலயம்) மறந்து பாவத்தில் வாழ்ந்து இருக்கிறார்கள். சங். 50:22 தேவனை மறக்கிறவர்களே இதை சிந்தித்துக் கொள்ளுங்கள், கர்த்தரின் ஆலயத்தை மறக்கிறவர்களை பீறிப்போடுவேன் என்று தேவன் கூறுகிறார். ஓசியா 4:6 வேதத்தை மறந்து இருக்கிறார்கள், வேதத்தை மறப்பதும் தேவனை மறப்பதும் ஒன்று. சங். 9:17

தேவனை மறக்கிறவர்கள் நரகத்தில் தள்ளப்படுவார்கள். நாம் எப்படி இருக்கிறோம்? தேவனை மறக்கிறவர்களாக இருந்தால் "நீ யார்" என்ற தேவனுடைய வார்த்தைக்கு நாம் ஆளாகி விடுவோம்.

ஆகையால், இந்த கட்டுரையை வாசித்துக் கொண்டு இருக்கும் என் அன்புக்கு சொந்தமானவர்களே! இஸ்ரவேல் மக்களை போல பொய்யான காரியங்களுக்காக தேவனுடைய சபையையும், வேதத்தையும் மறக்கும் போது நம்மை உண்டாக்கின தேவனை மறக்கிறவர்களாய் நாம் காணப்படுவோம். இப்படிப் பட்ட காரியத்தை செய்தால் தான் தேவனை மறப்பது என்று அர்த்தம் இல்லை. நம்முடைய வாயின் வார்த்தை, பார்வை, சிந்தனை, செயல்பாடுகள், இவைகளினால் நாம் பாவம் செய்தால் கூட தேவனை மறக்கிறவர்களாக காணப்படுவோம். ஏசா 49:15 தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இறங்காமல் தன் பாலகனை மறப்பாளோ? கண்டிப்பாக மறக்கவே மாட்டாள். ஒருவேளை மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை என் தேவன் கூறுகி றார். இப்படிப்பட்ட தேவனை நாம் மாம்சீக (சரீர) காரியத்திலும் ஆவிக்குரிய ரீதியிலும் அவரோடு சார்ந்து வாழ்வோம். அவரை மறக்கிறதற்கும் நாம் யார்? ஆமென்.

**P.M. சம்மா**
திருப்பத்தூர்.

## பொய்

பிசாசு பொய்யனும், பொய்க்குப் பிதாவுமாயிருக்கிற படியால் அவன் பொய் பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான் (யோவா 8:44)

...பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் (வெளி 21:8)

கர்த்தர் வெறுக்கும் ஏழு காரியங்களில் பொய்யும் ஒன்று (நீதி 6:16:19)

# தோற்றத்தில் குள்ளமான விசுவாசத்தில் உயரமான

சிறுவர் பகுதி

சிறு பிள்ளைகளே, இம் மாதமும் உங்களை சந்திப்பதிலே மிகவும் மகிழ்ச்சி கொள்கிறேன். மாதந்தோறும் உங்களுக்கு நல்ல பாடங்கள் கிடைக்கும் என நம்புகிறேன். சரி, இம் மாதம் நம் எல்லோருக்கும் பிரபலமான ஒரு நபரை பற்றி ஒரு வித்தியாசமான கோணத்தில் பார்க்கலாம். யார் அந்த நபர் என்று அறிய ஆவலாக உள்ளதா?

வாசியுங்கள், லூக். 19: 1-9 வரை. வாசித்து விட்டீர்களா? யார் அந்த மனிதன் என்று அறிந்து கொண்டீர்களா? ஆம், சகேயுவை தான். சரி, அவரிடம் இருந்து சில பாடங்களை நாம் கற்றுக்கொள்ளலாம்.

சகேயு எப்படிப்பட்டவன் என்று வேதாகமம் நமக்கு கூறுகிறது? 2-ம் வசனத்தில், அவன் ஆயக்காரருக்குத் தலைவனும், ஐசுவரியவானுமாயிருந்த ஒரு மனுஷன் எனக் கூறுகிறது. சரி, இப்பொழுது அவன் என்ன செய் தான் என்று பார்க்கலாமா? வாருங்கள் நாம் சேர்ந்து பார்க்கலாம்.

இயேசுக்கிறிஸ்து எரிகோவுக்குள் பிரவேசிப்பதற்கு சற்று முன்னே ஒரு குருடனை பார்வையடையச் செய்து ஜனங்களை ஆச்சரியப்படவைத்து, தேவனை அவர்கள் புகழும் வண்ணம் ஓர் அற்புதத்தைச் செய்தார். அதற்கு பின்பு, அவர் எரிகோ வழியாக நடந்து போனார். ஜனங்கள் திரளாக அவரைக் காணும்படி கூடினார்கள். அப்பொழுது சகேயு என்பவன் மிகவும் குள்ளமாக இருந்தபடியினாலே ஜனக் கூட்டத்தின் மத்தியில் இயேசுவை காண முடியவில்லை. ஆனால் அவனுக்குள்ளாக இருந்த எண்ணம் என்ன என்று நாம் பார்த்தால், 3-ம் வசனத்தில் "இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகை தேடினான்" என்று கூறுகிறது. 4-ம் வசனத்தில் அவனுடைய எண்ணம் நிறைவேற அவன் என்ன செய் தான் தெரியுமா? இயேசு போகும் வழியில் முன்னாக ஓடி போய் ஒரு காட்டத்தி மரத்தில் ஏறிக் கொண்டான்.

இயேசு அவ்விடத்தில் வந்த போது அவனை அண்ணாந்து பார்த்து, " சகேயுவே, சீக்கிரம் இறங்கி வா" நான் இன்றைக்கு உன் வீட்டிலே தங்க வேண்டும் என்றார். அவனும் அதைக்கேட்டு சந்தோஷத்தோடே இறங்கி வந்து அவரை அழைத்துக் கொண்டு போனான் என்று வேதம் நமக்குக் கூறுகிறது (வச. 4-6).

மேலும் தொடர்ந்து (வச. 6-10) ஆகிய வசங்களைப் பார்த்தால் அவன் என்னென்ன காரியங்களைச் செய்தான் என்று வேதம் நமக்கு தெளிவுபடுத்து கிறது.

சரி, இதிலிருந்து நாம் கற்கக் கூடிய பாடங்கள் என்ன?

*முதலாவதாக,* இயேசு வைக் காணக்கூடிய வாஞ்சை அவனுக்குள் இருந்தது. ஒரு வேளை அவர் செய்த அற்புதங் களை அவன் கேள்விப்பட்டி ருக்கலாம். எனவே தான் அவர் எப்படிப்பட்டவரோ என்று காண வகைதேடினான். அவன் மிகுந்த ஐசுவரியவானாக இருந் தாலும், ஓர் உயர் பதவியில் இருந்தாலும் இயேசுவைக் காண வேண்டும் என்ற வாஞ் சை அவனுக்கு இருந்தது.

*இரண்டாவதாக,* அவனு டைய இயலாமையிலும் அவ ரைக் காண வேண்டும் என்ற எண்ணம் கொண்டு அதற்கான வழிகளை தானே செய்தான் என்ன செய்தான் தெரியுமா? முன்னே கூறினது போல, இயேசு செல்லும் வழியில் முன் னாகப் போய் காட்டாத்தி மரத் தில் ஏறினான் இயேசுவைக் காண தன்னை அவன் ஆயத் தப்படுத்தினான்.

*மூன்றாவதாக,* இயேசு அவனை நோக்கி, நான் உன் வீட்டில் தங்க வேண்டும் என்று சொன்னதைக் கேட்டு சீக்கிர மாய் கீழே இறங்கி வந்து சந்தோஷமாய் அவரை அழைத்துக் கொண்டு போனான். அவர்கள் வீட்டிற்கு சென்ற போது அங்கேயும் சில காரியங் களைச் செய்தான். இந்த காரி யங்களின் பலனாக அவன் என்ன ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டான் தெரியுமா? (வாசி யுங்கள் 9ம் வச) இயேசு அவனை நோக்கி இன்றைக்கு இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது எனக் கூறினார். எவ்வ ளவு பெரிய ஆசீர்வாதம். அந் நாளில், அநேக ஜனங்களுக்கு மத்தியில் அவன் ஒருவனுக்கு மட்டுமே இது கிடைத்தது. எதி னால் தெரியுமா? அவன் செய்த காரியங்களுக்காக, நாமும் கூட நம்முடைய வாழ்வில், இச்சிறு வயதிலிருந்து சகேயுவைப் போன்று நம் இயேசுவைக் காண வாஞ்சையுள்ளவர்களாய், நம்முடைய வாழ்வில் வரும் ஈவுகளை சந்தோஷமாக ஏற்றுக் கொண்டு தேவனுக்கும் அவரு டைய குமாரனுக்கும் பிரியமாக நடக்க முற்படுவோம். தேவன் நம்முடைய செயலுக்குத் தக்க தான பலனையும் ஆசீர்வாதங் களையும் கிருபைகளையும் நமக்குத் தருவார். நாமும் சகே யுவைப் போல ஆத்துமாவி லும், சரீரத்திலும் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள முடியும். தேவன் உங்களை ஆசீர்வதிப் பாராக.

மனன வசனம் : மத். 6:33

**ABEL. R. NAYAGAM**

## " துருவின் சாட்சி " நூலில் இருந்து
## பாடம் - 5

# வசன அடிப்படையிலான கொடுத்தலுக்கு பலன்

### நோக்கம்

கொடுத்தல் ஒரு போதும் ஒருவரை தரித்திரராக்காது என்பதையும், மாறாக அவரை ஐசுவரியவானாக்கும் என்பதையும் மற்றும் கொடுத்தல் காரியத்தில் நாம் தேவனைத் தோற்கடிக்கவும் முடியாது என்பதையும் காட்டுவது.

### உங்கள் சிந்தனைக்கு

கிரியைகள் இல்லாத விசுவாசத்தைத் தேவன் மதிப்பதில்லை, அது போல், விசுவாசம் இல்லாத கிரியைகளை தேவன் ஏற்று பலன் அளிப்பதில்லை.

### முன்னுரை

தேவன் வேதாகமத்தில் ஏராளமான வாக்குத்தத்தங்களை வைத்திருக்கிறார். எந்த ஒரு வாக்குத்தத்தத்தின் மதிப்பும் அதை கொடுக்கிறவரின் மேன்மை மற்றும் நேர்மையைப் பொறுத்து தான் அமையும். மகாமேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களை தேவன் அவருடைய பிள்ளைகளுக்குக் கொடுத் திருக்கிறார். "தம்முடைய மகிமையினாலும், காருண்யத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும், தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்ய வல்லமையானது நமக்குத் தந்திருக்கிறது ". (1பேதுரு 1:3) "தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்". (பேதுரு 3:9) "பொய் சொல்ல தேவன் ஒரு மனிதர் அல்ல; மனம் மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா?" (எண். 23:19).

தேவன் பண்ணியிருக்கிற மகா பெரிய, விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களுள் பெரும்பாலானவைகள் நாம் கர்த்தருக்கு கொடுப்பது சம்பந்தமானவைகள். ஒரு மனிதன் "நான் வேதாகமத்தை விசுவாசிக்கிறேன்" என்று சொல்லும் போது, அவன் நான் "தேவனுடைய வாக்குத்தத்தங்களை விசுவாசிக்கிறேன்" என்றும்

சொல்கிறார். நாம் இக்கருத்தை மிக ஆழமாக படிப்பதற்கு முன்பு, நான் உங்களிடத்தில் கேள்வியொன்றை கேட்க விரும்பு கிறேன், தேவன் தம்முடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்று வாரா? இதைவிட வேறு முக்கியமான கேள்வி எதுவும் இல்லை என்று எனக்குத் தெரியும். எல்லாமே இதைச் சார்ந்து தான் இருக் கிறது. தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றி னால், வேதாகமம் உண்மையானதாயிருக்கும் மற்றும் அவரு டைய வார்த்தைகளையும் நாம் நம்ப முடியும். நம்முடைய பாடத்தில், நம்முடைய பணத்தைக் கர்த்தருடைய வேலையில் முதலீடு செய்வது சம்பந்தமாக செய்திருக்கிற வாக்குத்தத் தங்களை நாம் பார்ப்போம்.

## I தேவன் வாக்குத்தத்தம் செய்த சில காரியங்கள்

பூமியுள்ள நாளளவும் விதைப்பும், அறுப்பும், சீதளமும், உஷ்ணமும், கோடைகாலமும், மாரிகாலமும், பகலும், இரவும் ஒழிவதில்லை. (ஆதியாகமம் 8:22) இது, வருடங்களின் பருவத் தைப் பற்றி தேவன் செய்திருக்கிற வாக்குத்தத்தம் ஆகும். தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்ததிலிருந்து இந்த வாக்குத் தத்தம் தவறினதேயில்லை என்றும் வாக்குத்தத்தம் செய்திருக்கி றார். (ஆதியாகமம் 9:11).

நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கை விடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறார். (எபிரெயர் 13:5). மனுஷருக்கு நேரி டுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங் கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடு கூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக் குவார் (I கொரிந்தியர் 10:13) ஒரு மனிதன் கிறிஸ்துவில் விசு வாசம் வைத்து, தன்னுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்பி, இயேசுவின் நாமத்தை அறிக்கை செய்து கிறிஸ்துவின் சரீரத் திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றால் அவனுடைய பாவங் களை மன்னிப்பதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்.

ஞானஸ்நானம் சம்பந்தமாக தேவன் கொடுத்திருக்கும் வாக்குத்தத்தங்களை தேவன் நிறைவேற்றுவார் என்று விசுவா சிக்கும் சபை அங்கத்தினர்கள், அதே தேவன் கொடுத்தல் சம்பந் தமான வாக்குத்தத்தங்களையும் நிறைவேற்றுவார் என்று விசுவா சித்தால் குறுகிய காலத்தில் இந்த உலகத்தில் சுவிசேஷத்தை அறிவித்து விடலாம். மீண்டும், மீண்டும் சொல்லுகிறேன், உற்சாக

மாய்க் கொடுக்கிறவர்களை தேவன் அபரிமிதமாய் ஆசீர்வதிப் பதாக வாக்குக் கொடுத்திருக்கிறார். நீங்கள் இதை நம்புகிறீர்களா?

## II பழைய ஏற்பாட்டில் தேவன் செய்திருக்கிற வாக்குத்தத்தங்கள்

" உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பல னாலும் கர்த்தரைக் கனம் பண்ணு, அப்போது உன் களஞ்சியங் கள் பூரணமாய் நிரம்பும்; உன் ஆலைகளில் திராட்சை ரசம் புரண் டோடும் ". (நீதிமொழிகள் 3:9-10).

ஒவ்வொரு கட்டளைக்கும் அதோடு தொடர்புடைய ஆசீர்வாதம் உண்டு. நம்முடைய விளைச்சல்களில் தேவனுக்கு முதலிடம் கொடுத்தால் நம்முடைய களஞ்சியங்களை பூரணமாய் நிரப்புவதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். இதை நான் முழு மனதோடு விசுவாசிக்கிறேன். அதோடு கூட இது உண்மை என்பதை என்னுடைய அனுபவத்தால் அறிகிறேன். " உதாரகுண முள்ள ஆத்துமா செழிக்கும்; எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும் " (நீதி. 11:25). இந்த வாக்கி யத்தை சொல் அர்த்த ரீதியில் எடுத்திருந்தால், வெகு குறைந்த மக்கள் செழிப்பாக இருப்பார்கள்.

"உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள் மேல் போடு; அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனைக் காண்பாய்". (பிரசங்கி 11:1) "ஆடம் கிளார்க்" (Adam Clark) இந்த வசனம் சம்பந்தமாகச் சொல்லும் போது, இது நெல் விதைப்பதை மறைமுகமாகப் பேசு கிறது என்கிறார். நெல் மணியானது சேற்றில் விதைக்கப்படு கிறது. இது கால்நடைகளின் பாதங்களால் மிதிக்கப்படுகிறது. இப்படியாக இந்த விதையானது வேர் கொண்டு வளர்ந்து அபரித மான அறுவடையைக் கொடுக்கிறது. நாம் கர்த்தருக்கு கொடுக் கும் போது அது நல்ல நிலத்தில் விதைக்கப்படும் விதையாயிருக் கிறது.

"என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படி தசம பாகங்களையெல்லாம் பண்ட சாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பல கனிகளைத் திறந்து, இடங் கொள்ளாமற்போகு மட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வரு ஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னை சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளில் கர்த்தர் சொல்லுகிறார். (மல்கியா 3:10) இதை முயற்சி செய்து பார்த்த மனிதன் இதை உண்மை என்று தன் அனுபவத்தில் அறிந்து கொள்கிறான். இதை முயற்சி செய்து பார்க்காத மனிதர் இது உண்மை தான் என்று சொல்ல அறியாதவனாயிருக்கிறார்.

ஆறு மாதங்களுக்கு முன்பு மரித்துப்போன ஒருவருடைய மனைவியாகிய ஒரு விதவை, ஒரு சுவிசேஷப் பிரங்கியாரிடம்

வந்து, அவள் கர்த்தருக்குக் கொடுப்பது சம்பந்தமாக திட்டமிடு வதில் உதவி செய்யுமாறு கேட்டுக்கொண்டாள். அவள் வாரந் தோறும் ஐந்தாயிரம் ரூபாய் தருவதாக தீர்மானம் செய்தாள். இது அவள் உருளைக்கிழங்கு பயிர் செய்வதற்கு முன்பு எடுத்த தீர்மானம். அறுவடைக்கு பிறகு என்னுடைய நண்பரான அந்த பிரசங்கியார் உதாரத்துவமாய் கொடுத்ததற்காக அந்த பெண் ணைப் பாராட்டினார். அந்தப் பெண் இப்படியாகச் சொன்னாள். இந்தப் பண்ணையின் வரலாற்றில் மிகப்பெரிய மகசூலை நாங்கள் கண்டிருக்கிறோம். நான் எப்படி கொடுக்க வேண்டுமோ அப்படி நான் கொடுக்க ஆரம்பித்தபோது, தேவன் என் மீது ஆசீர்வாத மழையை பொழியப் பண்ணினார். என் களஞ்சியங்கள் எல்லாம் நிரம்பி வழிகிறது என்று சொன்னாள்.

இதைத் தான் தேவன் உங்களிடமும் என்னிடமும் எதிர் பார்க்கிறார், நீ எப்படி கொடுக்க வேண்டுமோ அப்படிக் கொடு. அப்போது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து உங்களுக்கு மழையையும் செழிப்புள்ள காலங்களையும் தந்து உங்கள் நெற் களஞ்சியங்கள் கொள்ளாதபடியாக தானியங்களால் நிரப்பமாட் டேனோவென்று என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று கர்த்தர் சொல்கிறார். கர்த்தருக்குக் கொடுப்பது நாம் செய்தே ஆக வேண்டிய ஒரு காரியம்.

நாம் கொடுக்கும் போது நம்மை ஆசீர்வதிப்பதாக வாக்குத் தத்தம் செய்திருக்கிற தேவன், நாம் கொடுக்காத போது நம்மை சபிப்பதாகவும் சொல்லியிருக்கிறார். எனவே, நாம் கொடுக்கும் போது தேவன் நம்மை ஆசீர்வதிக்கிறார், நாம் கொடுக்காத போது நம்மை சபிக்கிறார். கர்த்தருடைய சபையின் அங்கத்தி னர்கள் கர்த்தருக்குக் கொடுக்க மறுப்பதால் அனுதினமும் சபிக் கப்படுகிறவர்களாயிருகிறார்கள்.

(தொடரும்)

**உங்கள் கவனத்திற்கு**

**நாங்கள் வெளியிட்டுள்ள புதிய நூல்கள்**

1. **ஏன் நாங்கள் நம்புகிறோம், எதை நாங்கள் நம்புகிறோம் – பாகம் I & II**
2. **ஆத்தும ஆதாயப் பிரசங்கங்கள் – பாகம் II**

வேண்டுவோர் எங்களிடம் தபாலிலோ, அலை, தொலைபேசியிலோ, நேரிலோ தொடர்பு கொள்ளவும்.

*- ஆசிரியர்*

# இயேசு கிறிஸ்துவின் சிலுவை

சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது என்கிற உண்மையை பவுல் வலியுறுத்துகிறார் (1கொரிந்தியர் 1:18). கிறிஸ்தவர்கள், யூதருக்கு இடறலாயும், கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிற சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிற வேலையை நன்றாய்ச் செய்கிறார்கள் (1கொரிந்தியர் 1:23). அப்போஸ்தலனாகிய பவுலுக்கு சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பற்றி அறிந்து கொள்வது போதுமானது. அதைத்தவிர, வேறொன்றையும் அறிந்து கொள்ள அவர் விரும்பவில்லை (1கொரிந்தியர் 2:2). துன்பத்தின் காரணமாக சிலர் கிறிஸ்துவின் சிலுவையை விரும்புவதில்லை (கலாத்தியர் 6:11).

சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து பிரசங்கிப்படுவதை ஏற்றுக்கொள்வதில் யூதர்களைவிட கிரேக்கர்கள் சிறந்தவர்கள் அல்ல. அவர்கள் ஞானத்தைத் தேடுகிறார்கள் (1கொரிந்தியர் 1:22). அவர்கள் விசுவாசிப்பதற்கு முன்பு புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் உண்மையென்று ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரே உபதேசம், அவர்கள் இந்த உலகத்தைப் பற்றி எப்படிப்பட்ட எண்ணத்தைக் கொண்டிருக்கிறார்களோ அதோடு இசைந்து வருபவைகளும், அவர்களுடைய காரண காரியங்களை திருப்தி படுத்துகிறவைகளும் காலங்களின் முக்கியத்துவத்தைக் குறித்து தீர்ப்பு செய்யும் திறனை திருப்திபடுத்துகிறவைகளும் தான். எனவே, அவர்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து என் கின்ற கருத்திலிருந்து திரும்பி அதை நிந்தித்து, அற்பமாக நினைத்து பரிகாசம் செய்கிறார்கள். எனவே அவர்கள் பைத்தியம் அல்லது மதியீனம் என்றழைக்கிறார்கள் (1கொரிந்தியர் 1:24). சிலுவை அவர்களை குழப்புகிறது, அவர்கள் இருப்பதற்கு மதிப்பைக் கூட்டக் கூடிய எல்லா மதிப்புகளையும் விட்டுவிடாமல் சிலுவையை மனப்பூர்வமாக அதற்குரிய மரியாதையோடு அவர்களால் காண முடியாது.

தேவனால் அழைக்கப்பட்டவர்களுக்கு சிலுவை என்பதன் பொருளைப் பற்றிய உண்மையான புரிந்து கொள்ளுதல் இருக்கிறது (I கொரிந்தியர் 1:24). ஏனெனில், அவர் பலவீனத்தால் சிலுவை அறையப்பட்டிருந்தும், தேவனுடைய வல்லமையினால் பிழைத்திருக்கிறார் (II கொரிந்தியர் 13:4). சிலுவை வாயிலாக இந்த உலகத்தின் இரட்சிப்புக்காக தம்முடைய வல்லமையை வெளிப்

படுத்த தேவன் பிரியப்பட்டபடியால் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை பிரசங்கிப்பவர் மனித ஞானத்தின் வாதத்தையோ, பேச்சாற்றலின் கௌரவத்தையோ உதவியின் ஆதாரமாகப் பயன் படுத்தினால் அது சிலுவையின் தெய்வீக ஆற்றலை இல்லாமல் போகச் செய்துவிடும் (I கொரிந்தியர் 1:17). மரத்திலே தூக்கப் பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத் திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார் (கலாத்தியர் 3:13). இயேசு சிலுவையை சகித்தபோது, இந்த அவமானத்தைத்தான் அவர் எண்ணாதிருந்தார் (எபிரெயர் 12:2). இது அவருடைய கீழ்ப்படிதலின் முழு அளவை வெளிப்படுத்துகிறது (பிலிப்பியர் 2:6-8). அதைப் பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறிய வில்லை; அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்கள் (I கொரிந்தியர் 2:8). இங்கே பவுல் கிறிஸ்துவின் சிலுவையை உலகளாவிய முக்கியத்துவம் வாய்ந்ததாக விவரிக்கிறார். தேவனுடைய ஞானமானது மீட்பின் திட்டத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது, அதில் இயேசு கிறிஸ் துவின் மரணம் நிச்சயமான நிகழ்வாயிருக்கிறது அதன் நிறை வேறுதல் விசுவாசிகளை மகிமைக்குள்ளும், தெய்வீக ஜீவனை அதன் முழுமையான தன்மையிலும் கொண்டு வரும்.

கிறிஸ்துவின் சிலுவையின் தாக்கம் இதே விதமாக கொலோசெயர் 2:14-ல் விவரிக்கப்பட்டிருக்கிறது அங்கே நமக்கு எதிரிடையாகவும், கட்டளைகளால் நமக்கு விரோதமாக வும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராத படிக்கு எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்து நம்முடைய அக்கிரமங்களெல்லாவற்றையும் நமக்கு மன்னித்திருக்கிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இயேசு தன்னுடைய சீஷனாக இருக்க விரும்புகிறவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக்கொண்டு (மாற்கு 8:34) தன் சிலுவையை சுமக்க வேண்டும் என்று சொன் னார் (மத்தேயு 10:38; லூக்கா 14:27). பவுல் கிறிஸ்துவின் மரணத் தில் பங்கு பெற்றதற்கு அடையாளமாக இருந்தது (ரோமர் 6:3). நம்முடைய பழைய மனுஷன், அந்த பாவி கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டிருக்கிறான் (ரோமர் 6:6).

ஆகவே, நாம் ஆவியின் போதனையின்படி முழுமையான கீழ்ப்படிதலோடு புதிய வாழ்க்கையை வாழவேண்டும் (கலாத் தியர் 5:25). பவுல் ஒத்துக்கொண்டார்; கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்.

***Hans J.Dederscheck*** ***Benny Martin***

# வேதாகமம் மட்டும் போதுமா?

**வே**தாகமத்தில் கூறப்பட்டுள்ள நல்ல பல காரியங்களை நாம் அவசியம் படிக்க வேண்டும். ஆனால், நமது வாழ்வு பற்றி கர்த்தருடைய கட்டளைகளைப் புரிந்து கொள்ள வேறு சில சட்ட நூல்களும், உதவிகளும் நமக்குத் தேவையில்லையா?-இப்படி ஒரு கேள்வியை இன்று பலர் கேட்கிறார்கள்.

இக்கேள்விக்குச் சரியான விடைகாண அதே வேதாகமத்தைத்தான் நாம் நாட வேண்டும். கர்த்தருடைய சுவிசேஷத்தில் (வேதாகமம்) காணப்படாத வேறு சில காரியங்களையும் நாம் செய்ய வேண்டுமென தேவன் விரும்புகிறாரா என்பதை அறிய அவருடைய வசனங்கள் என்ன கூறுகின்றன என்பதைப் பார்ப்போமா?

வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனிதன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது என்பதாக 2 தீமோத்தேயு 3:16,17 வசனங்களில் நமக்குச் சொல்லப்பட்டுள்ளது. வேதாகமம் நமக்கு எல்லா நற்கிரியைகளையும் கொடுப்பதாக இருப்பின், அதில் கூறப்படாத எந்தக் காரியத்தைச் செய்து தேவனை பிரியப்படுத்த வேண்டும் என அவர் விரும்புகிறார்?

சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணம் என யாக்கோபு 1:25ல் கூறப்பட்டுள்ளது. "பூரணம்" என்ற வார்த்தைக்கு எதுவும் விட்டுப் போகாத முழுமையான என பொருள். எதுவும் விட்டுப் போகாத முழுமையான வேதாகமத்தை நாம் கையில் வைத்துக் கொண்டு, தேவனுடைய விருப்பத்தை அறிய வேறு எந்த புதிய செய்தியை நாடி நாம் அலைய வேண்டும்?

தம்முடைய மகிமையினாலும், காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினது என்று பேதுரு கிறிஸ்தவர்களுக்கு எழுதியுள்ளார். (II பேதுரு 1:3). ஜீவனுக்கும், தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும் ஏற்கனவே தேவன் நமக்குத் தந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. வேறு சட்ட நூல்கள் தமக்குத் தேவையா? அல்லது வேறு எந்த உதவியை எதிர்பார்க்க வேண்டும்?.

கர்த்தருடைய வசனம் சத்தியமானது. (யோவான் 17:7). வசனத்தைப் பூரணமாமக தந்துள்ளதாக அவர் கூறியிருக்கிறார். அவர் கூறுவதில் நாம் நிலைத்திருப்போம்.

**ஜெர்ரி பார்பர்**

Come, Participate & Be blessed

# GOSPEL MEETING IN MUMBAI

Date : 5.11.2010 to 7.11.2010 (Fri., Sat., Sun)

Time : Evening 6.00 to 9.00 p.m.

## Bro. S. RAJANAYAGAM

(Television Speaker)

Kangayam - Tamilnadu.

Place : Manohar Joshi College Ground,
Chathrapathi Shivaji Vidyalaya,
Behind P.M.G.P. Colony Bus Depot,
Dharavi, **Mumbai - 400 017.**

**"கிருபையுள்ள வார்த்தை"** தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்


பேச்சாளர் : சகோ. **பிலேமோன் ராஜா**, மதுரை.

| | | | |
|---|---|---|---|
| Z தமிழ் | TV | வெள்ளி | காலை 5:30 மணி |
| தமிழன் | TV | ஞாயிறு | காலை 7:45 மணி |

**"கிறிஸ்துவின் வசனம்"** தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

பேச்சாளர் : சகோ. **அர்ச்சுனன்**, வத்தலக்குண்டு.

| | | | |
|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை 6:00 மணி |
| இமயம் | TV | புதன் | காலை 6:30 மணி |



**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**

| LANGUAGE | DAYS | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Thursday Sunday | 6.45 - 7.00 a.m. | Box. 3815 New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Sundays, Mondays, Tuesdays, Thursdays, | 2.00 - 2.15 p.m. | Box. 80 Kakinada - 533 001 | Joshua Gootam |
| TAMIL | Mondays, Tuesdays, Thursdays, Fridays, | 5.30 - 5.45 p.m. | Box. 8405 Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Fridays | 3.45 - 4.00 p.m. | Box. 5540 Thiruvananthapuram - 695 034. | P.K. Varghese |

Regd. News Paper RNI No. 47661/87- Postal Regn. No. Erode/26/2009-2011
Posted at Erode HPO on 20/21 of Every Month.

Licensed to Post without pre payment
No: TN / WR / ERD / 03 / WPP / 2009-20111



கருத்தரங்கில் பாடல் வேளையின் போது



வேதாகம கருத்தரங்கில் திரண்டிருந்தவர்கள்

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.